கடவுள்துணை.

தற்கால முற்கால நாத்திகத்தைப்பற்றியும்

பொதுவாய்தேவபக்தியைக்குறித்தும்

விவேகத்தைப்பற்றியும் எழுதிய

தெய்வபக்தி விவேக விளக்கம்.

"அறிவுடையாரெல்லாமுடையாரறிவிலா

ரென்னுடையரேனுமிலர்."

"எப்பொருள்யார்யார்வாய்க்கேட்பினுமப்பொருண்

மெய்ப்பொருள்காண்பதறிவு."

கேட்டாற்கிடைக்கும்

படித்தாற்பலனாகும்.

---

28 MAY 1909 MADRAS

கடவுள் துணை.

பாலிப்பாளையம் மீருவ்சேன் மகன்

தங்கக்காசிம்

இயற்றிய

தெய்வபக்தி விவேக விளக்கம்.

இதை

தி. சொ. சி. பி. க. வாலைதாசக்கவிராஜர்

பரோபகாரமாய் அச்சிடும்படி கேட்டுக்கொள்ள

மேற்படி தங்கக்காசிமால்

சேலம் சுதேசாபிமானி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1909.

(*Registered copy right.*)

பிராஞ்சு இந்தியாவிலும் ரிஜிஸ்தர் செய்திருக்கிறது.

செய்யுள் அட்டவணை

24 APR 1969
MADRAS

	பக்கம்.
அறிவின் தானவியல்பு	15
அறிவினுபயோகம்	16
அறிவினுபமானம்	17
அடிமை விலை	25
அடக்கம்	31
அழகு	46
அறிவு	53
ஆகாயவியல்பு	6
ஆமேருன்நல்ருசித் கல்விவிருத்தி...	12
ஆங்காரம்	37
ஆத்மவிசாரணை	55, 56, 6
இராஜபத்தி தற்காலநீதி	57
இரவி, சூரியன்	6
இந்து முன்கல்வி	11
இருதயவியல்பு	42
இலாகிரிவியல்பு	51
உலோபரியல்பு	38
ஊக்கம், முயற்சி	29
ஊழ்விதியினியல்பு	32
ஒற்றுமை, ஒரிமை	30
கல்வியறிவியல்பு	13, 14, 4
கிருபை, தயவு	36
குருதியானம்	58
சன்மார்க்கம்	2
சாதுரியம்	28, 29
சிறுகோபம்	35
சித்தசெயல்	44
சி[illegible]ரியல்பு	44
செல்வமியல்பு	52
தற்கால நாத்திகர் தத்துவம்	3
தத்துவசாத்திரம்	7
தற்கால முற்கால கல்வி	13
துறவு, சன்யாசம்	54

	பக்கம்.
தூஷணம்	39
தெய்வபக்தி	1
தேவச்செயல், மனிதசெயல்	40
தேகவிசாரணை	54, 55
நன்மைவிசாரிப்பு	19, 20
நாத்திகர் தத்துவம்	3
நீதிவிசாரிப்பு	20, 21, 21, 22
பழைய ராஜநீதிகள்	26, 27, 23
பலஜென்மவியல்பு	33
பரிபாஷை	45
பாஷை	45
பரியாசவியல்பு	46
பகுத்தறிவு	57
பிணக்கு, யுத்தம்	40
புத்தர் தத்துவ கோட்பாடு	4
புகழ்ச்சி	37
பூமியியல்பு	5
புருடர் பெண்கள் மோகம்	49
புருடர் விந்துநிலை	49
புணர்ச்சி, போகம்	50
பூர்வகாலவொற்றுமை	10
பூர்வநீதிகள்	23
பூர்வநீதி	24
பூர்வகாலம் சரிகட்டுநீதி	13
பூர்வநீதிச்செயல்	22
பூர்வவரசர் கடனியல்பு	24
பூர்வவரசர் யுத்தமியல்பு	25
பெருங்கோபம்	15
பெருமை	36
பெண்ணழகு, உபயோகம்	48
பெண்ணழகினியல்பு	47, 47
பெண்ணமுதநிலை	50
பொறுமை	33

	பக்கம்.
பொய்	34
பொருளினியல்பு	38
பொறுமை	41
மறுச்செயல்	43
மனச்செயல்	43
மனிதகுணபேதம்	18, 19
மனிததொழிலியல்பு	30
மர்மதானவுற்பவம்	43
மார்க்கம்	2
மானாபிமானம்	32
முற்கால இந்துதேசக்கல்வி பெருமை	7
முற்கால ராஜநீதி	26
முற்கால பெரியோர் ராஜநீதி	28
மெய்மையியல்பு	34
மேல்தரக்கல்வி	12
மேலோர்குணம்	17, 18
மோ வஞ்சனை	39
மோகத்தினியல்பு	51
யாசகரியல்பு	52
வல்லமை	31
வறுமை	41
விபரீதத்துவம், கலைஞானம்	11
விவகாரமியல்பு	42
விசுவாமித்திரர் பசியின் கொடுமை	53

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 29 APR 1909 MADRAS.

கடவுள் துணை.

தெய்வபக்தி விவேக விளக்கம்.

கடவுள் வணக்கம்.

ஆதியந்தமுடிவற்ற வற்புதச்
சோதியே ப[illegible]பொருளெனும்
ஓதுவேதங்க ளுள்ளமளவிடா
நீதியேயெனைக்காத்தருள் நித்தனே.

தெய்வபத்தி, விசுவாசம், நிண்ணயம், நம்பிக்கை.

சீர்கொண்ட தேவதாபத்தி விசுவாசமாந்
திடமனதி னிண்ணயமுமாஞ்
செய்கின்ற தீவினையகற்றிடும் பத்தியாந்
திருஞானபத்தி பெரிதாம்
நேர்கொண்ட நெறியான பத்தியேமுத்தியா
நேர்தேவவழிபாமோ
நேமித்ததவதரும நேர்நலம்பலியாத்
நேர்தேவ பத்தியற்றாற்
பார்கொண்டபத்தியே தெய்வவழிமுத்திவழி
பரிசுத்த வேதவழியாம்
பத்தியேநன்மையாம் பத்தியேமார்க்கமாம்
பத்தியே கிருபைமிகவாம்
போர்கொண்ட புலன்பொறிக் கெட்டாதபூரணம்
பொருந்துவார் முத்திவழியிற்
பொதுமறைக்கடவுளை நம்பாதபேர்கட்கு
போக்கென்ன தீயவழியே.

சன்மார்க்கம், ஒழுக்கம், ஆசாரம்.

தேசமதிலாசார மனிதர்க்கு நன்மையாந்
தெய்வவழி சன்மார்க்கமாந்
தேவனின்பத்தியாற் செபதவமொழுக்க
தெய்வதுதி சன்மார்க்கமாம்
பாசவினையகலநற்பாரோபகாரமும்
பரிசுத்த வாசாரமாம்
பல்வழியிலாசார மேன்மையாமோட்சவழி
பழுதற்ற சன்மார்க்கமாம்
நேசமார் தயாதரும நீதிமுறை மார்க்கமே
நிலைத்ததொரு சன்மார்க்கமா
நேர்வழிகள் நிண்ணயஞ் சன்மார்க்கவழிகளா
நெறிமறையி னுரைவழிகளாம்
சாசனமிலாசாரக் கெடுதலாலவர்கட்குச்
சண்டாளப் பட்டமிகவே
சர்வபரிபூரணத் தயாளுனைப்பணியாத
தாலர்வழி துன்மார்க்கமே. (2)

மார்க்கம்.

அத்வைததுவைதமும் வேதாந்த சித்தாந்த
மாசிரியகுரு மார்க்கமும்
ஆன்மாவின்மார்க்கங்க ளறிவுமார்க்கங்களு
மழியாததவ மார்க்கமுஞ்
சத்துமார்க்கங்களுந் தத்வமார்க்கங்களுஞ்
சர்வசமரச மார்க்கமுஞ்
சத்திமார்க்கங்களுஞ் சித்தமார்க்கங்களுஞ்
சகதருமநெறி மார்க்கமும்
முத்திமார்க்கங்களு மில்லறந்துறவற
முரித்தான மெய்மார்க்கமு
மூலமறைமார்க்கமு மேலான சுயமார்க்க
முதலிய சன்மார்க்கமும்
பத்திமார்க்கங்களும் பாரோபகாரமும்
பழுதற்ற சன்மார்க்கமாம்
பரமனைபத்தியாய் நம்பாதபேருக்குப்
பலனேது துன்மார்க்கமே. (3)

நாத்திகர் தத்துவம்.

தன்னாலே தானான மண்முதற் பூதமாந்
தவியாத பொருள் பூதமாந்
தவியாதபொருளைந்து பூதமது சகலமுந்
தானே படைக்குமியல்பா
மென்னாளு மழியாத நிலையானபூதமா
மெவ்வுயிரு மாக்குமியல்பா
மென்னறியவாகாய மிந்தரப்பொருளெலா
மெதுவுமே பூதவடிவாம்
மன்னுலகபூதமே சர்வவுயிராகும்
மனிதனே மேலானவன்
மனிதர்கள் வணங்கவொரு மேலானபொருளிலை
மறைநூலாதுவில்லையாங்
கண்கண்டதுண்மையே காணாது பொய்யுமாங்
கடவுளேயில்லை நிசமாங்
கடையான மூடநின் றற்கால தத்துவங்
கருதினாற் பாவமிகுமே. (4)

தற்கால தத்துவ நாத்திகர்.

தத்துவப்புரட்டான தற்காலநாத்திகர்
தாழ்வான பாவசமயர்
தையலெவராகினுஞ் சம்மதிகள் வேண்டுமாந்
தரியாதோ பிள்ளையென்பார்
பெற்றாரைச்சேரினு நாள்வந்துசாகிறார்
பின்னாலே பாவமேது
பெரிதானவின்பத்தை நிறைவேற்றல் கடமையாம்
பின்னுமொரு கடமையிலையா
நித்தசுகபோகமதை யடைவதிவ்வுலகிலே
நினைத்ததைமுடித்தல் நலமே
நீதிமுறைவேதமே பொய்யான கதைகளாம்
நிலமனிதரறிவு பெரிதாஞ்
சுத்தவுயிராத்துமா மனிதர்கட்கில்லையாஞ்
சுயமான கடவுளிலையாஞ்
சூதுவாதுகளான பொய்மாய்கை தத்துவஞ்
சூன்ய கல்விப்பாவமே. (5)

கலியுகாதி-வருஷம் 2500, புத்தர் தத்துவ கோட்பாடு.

ஆதிமுன் தத்துவநூல் தாபித்த புத்தரா
　　மாசையையொழித்த ரிஷியா
மரண்மனையிலிருமே லீலாவினோதத்தி
　　லடிபட்ட வாண்டன்பதாம்
வீதலொடுபிணி மூப்புவிடாதெனத் தானென்று
　　விரண்டோடி ருனுண்டியாய்
விரிபுவியின் மனிதரை வேரோடுமேயற
　　வெளியேற வோடுதந்தான்
சாதிபதிமங்கவே சன்யாசமுண்டிதஞ்
　　[illegible]றன் காவியுடையை
சகலவத்துக்குமேல் சக்தியொன்றேயெனச்
　　சாசுவத மழியாததாங்
தீதிலாச்சருவமுஞ் சக்தியாலாவதாங்
　　திரும்புவது நன்மையருகில்
தீவினையகற்றவே யட்டாங்கமார்க்கமாந்
　　திகம்பரனின் மோட்சவழியாம். (6)

புத்தனுடைய கோட்பாடுகள்.

1. கடவுள் ஒருவருமில்லை, வணங்கப்படத்தக்க பொருளும் யாதொன்றுமில்லை.
2. வேதங்களுக்கு ஆதாரம் யாதொன்றுமில்லை.
3. குருக்கள், செபம், பலி யாவும் பிரயோசனமற்றவை
4. சாதிபேதம் கூடாது.
5. இரட்சிப்பு எல்லாச்சாதிக்கும் ஆண்பெண் எந்தத் தேசத்தாருக்கும் பொது.
6. உலகம் நிலையற்றது.
7. ஆத்மாவென்பது இல்லை, ஆனால் உணர்ச்சிகளும் மனோபலமும் கருத்துப்பொருள்களுமுண்டு. ஆனால் ஆ[illegible] இல்லை.
8. மறுசனனமுண்டு. மறு பிறப்பாவது அவனுடை சரீரத்திலிருந்து கரைந்துபோன அணுக்களின் அமுசங்களினால் புதுச்சிருட்டி உண்டாகுவதிலடங்கியிருக்கிறது. ஆசையை ஒழித்திடவும்.

புத்தனுடைய தர்மமானது 8-பிரிவினையுள்ள சிறந்த பாதையில் நடப்பதாம். அந்தப் பிரிவுகளாவன:—

தெய்வபக்தி விவேக விளக்கம்.

1. நல்ல நோக்கம்.
2. நல்ல உணர்வு.
3. நல்ல வார்த்தை.
4. நல்ல நடத்தை.
5. நல்லவழியான ஜீவனம்.
6. நல்ல முயற்சை.
7. நல்ல ஞானம்.
8. நல்ல சிந்தனையும் சாந்தமும்.

புத்தர் இல்லறத்துறவறக் கட்டளையாவன:—

(1) உயிரைக் கொல்லாதிருப்பாயாக.
(2) கிடைக்காதபொருளை இச்சியாதிருப்பாக.
(3) பொய் சொல்லாதிருப்பாயாக.
(4) மதுபானம் பண்ணாதிருப்பாயாக.
(5) பகல் கடந்தபின்பு புசியாதிருப்பாயாக.
(6) நாடக சாலைக்குப் போகாதிருப்பாயாக.
(7) சரீரத்துக்குப் பூவாசனைத் திரவியஞ் சூடாதிருப்பாயாக.
(8) தரையில் பாயைத்தவிர மிருதுவானவற்றில் சயனியாதிருப்பா யாக.
(9) பஞ்சணை சார்மனை உபயோகப்படுத்தாதிருப்பாயாக.
(10) பொன்னையாவது வெள்ளியையாவது அணியாதிருப்பாயாக.

பூமியினியல்பு.

அந்தரத்தாடுகிற வெண்ணற்றவண்டமதி
லகிலமு மொன்றல்லவோ
வண்டங்களோய்வற்றுவகிலமுமோய்வற்று
மதிவேகமா யோடினும்
விந்தைமிகுவண்டங்கள் மோதாமலொட்டாமல்
விசையசைவு கொள்ளாமலும்
விற்பனவிநோதமா யிப்புவியையாக்கியு
மிரவுபகல் பூமிசுற்ற
யெந்திரப்பூமியே யிருபத்துநாலா
யிரஞ்சுற்று வளவுள்ளதா
மொருநாளும் மணியொன்று வாயிரங்கடிகைவழி
யெளிதாகவே சுற்றுமாந்
தந்திரவமைப்பாய்த் தயாபரக்கடவுள்தான்
தாரணியை யுண்டாக்கவே
தன்பூமி யென்பூமி தர்க்கயுத்தஞ்செய்வ
தாலமதில் மாண்டார்களே.

இரவி - சூரியன்.

அந்தரப்பெருவழியி லெண்ணற்றவண்டமதி
லாதவனு மொன்றல்லவோ
அரியபூமண்டலம் பதின்மூன்றுலட்சங்க
ளதிகபெரிதான ரவியாந்
சுந்தரச்சூரியன் துலை பற்றுக்கோடிமயிற்
சுடரொளிவு காங்கையீயுஞ்
சூழ்கின்றதாவரச் சங்கமப்பொருள்கட்கு
சுடரோனு முபயோகமாஞ்
சந்ததமுமண்டங்கள் தாழாமலேறுமல்
தப்பா[illegible]லநடையுஞ்
சாசுவதவற்புதவடிவான விரவியைச்
சகவாழ்வுக் காக்கினனே
யிந்துவுக்கொளிதந்து வருணனுக்குதவியா
மிரவிபய னெண்ணற்றதாம்
இரவிமதியண்டங்கள் யாவையுமமைத்தாடு
மிறையோனின் வலிமைபெரிதே. (S)

ஆகாயம்.

கண்ணுக்கடங்காத வந்தரப்பெருவழி
கணிக்கமுடியாத துலையாங்
காலமெல்லாங்கிரகமெத்திசையிலோடினுங்
ககனமது வரையற்றதாம்
விண்ணரிய விந்தையை விற்பனர்களாலுமே
விதிக்கமுடியாதுவிரிவாம்
விரிவான மண்டலமிராசி கிரகங்களும்
விண்வெளியிலே யொடுங்கும்
எண்ணரியபொருள்களுளாகாயமில்லாத
வெப்பொருள்களு மில்லையே
யேகனிடசிட்டிகளி லெல்லையிலாகாய
மேகவெளி பெரிதானதே
மண்டலமும் விண்டலமு மாக்கவுமழிக்கவு
மாபெரிய நாதநீயே
ம[illegible]வந்தர முனக்கற்பமாகுமே
மாறாத வலிமையோனே. (9)

தத்துவசாஸ்திர பூதங்கள்.

இந்துதேசத்திலே யைந்துபூதங்களா
மிலண்டனறு பத்துகாலாம்
எகிபத்தராபியா யெத்தேன்சு நாலுமா
மிவ்விதப் பூதபேதம்
எந்தப்பொருள்பூத மெண்ணல்மதிப்பதே
யெவாகளு மிந்துதனிலே
யெப்பொருளு மனுவுந்தவர்ச்சி தன்னிலேகாத்தல்
எனத்தள்ளுதல் நாலுமாம்
அந்தந்தேசமே யந்தந்தத்வநூல்
லவரவர்க்கே யுண்மையாம்
அளவற்றபொருளையு நால்வகைக்குறிப்பா
லளவிடுதே லீரோப்பினில்
விந்தைமிகு ஆதியை யளவிடத்தத்வநூல்
வீணன பொய்யாகுமே
விதிமறைக்கெட்டாத விமலநின்முடிவேது
விண்டவர்கள் கண்டதிலையே. (10)

கலியுகாதி வருஷம் 2531. முற்கால இந்துதேசக்கல்வி பெருமை.

புத்தனிடசீசனும் புத்தகுருப் பட்டமாய்ப்
பூண்டு முதலீரோப்பினிற்
புகழிந்து தத்துவம் வேதாந்த வைத்தியம்
போதித்த புத்தகுரசாம்
அத்தேன் சர்க்காதியாய்த் தத்வநூல்தாபித்த
ஆசிரிய புத்தகுரசாம்
அபிரிக்காயூரோப்பு அமெரிகா மூவர்க்கு
மாதிநூலத்தேன்சுமாம்
சத்வகுணமணியான *சரஸ்வதியத்தேன்சுமாஞ்
சாற்றினர் சகமீதிலே
சர்வதேசத்தினுமிந்து நூலாசிரியன்
றற்கால மாணுக்கனும்
இத்தேசமிந்துநூல் விர்த்தியற நிற்கவே
யெத்தேசநூல் விர்த்தியா
மெண்ணரிய கலைஞானங் கைத்தொழில்களெங்கு
மெளிமையற கற்கநலமே. (11)

*சரஸ்வதி—கல்வி.

A short note of Pythagoras.

பித்தாகுரஸ் சரித்திரச்சுருக்கம்.

கிறிஸ்து ஜனனத்திற்குமுன் 510-504-ல் பித்தாகுரஸ், இவன் நிசார்க்கஸ் என்பவனுடைய மகன். முதலில் தத்துவ சாஸ்திரி என்று பெயர்பூண்டவன் இவன்தான் கி. மு. 570-ம் வருஷத்தில் சோமஸ் என்ற தீவில் பிறந்தான். சிலர் கி. மு. 608-ம் வருஷத்திலும் சிலர் கி. மு. 584-ம் வருஷத்திலும் பிறந்ததாகச் சொல்லுகிறார்கள். இவைகளின் உண்மை புலப்படவில்லை. இவன் கிரீஸ்தேசத்தில் கல்விகற்றான். பிற்பாடு கி. மு. 560-முதல் 540-வரையில் அதாவது 20-வருஷ காலமாய் சீரியா, பொனீஷியா, எகிப்த்து, அரேபியா, க்ஷால்தியா, இந்திய கௌளாமுதலிய தேசங்கள் யாத்திரை செய்துவந்தான். இவன் எகிப்த குருக்கள்மாரிடத்தில் அநேக சங்கதிகளை தெரிந்துகொண்டு பிறகு க்ஷால்தியர்களுக்கு கிரந்தகர்த்தாவாகவும் பர்ஷியா பண்டிதர்களுக்கும் இந்திய ஞானிகளுக்கும் புத்தர்களுக்கும் உபாத்தியாயராக இருந்ததாகத் தெரிய வருகிறது. ஹெராக்லிட்டிஸ் என்பவனும் இன்னும் எல்லா கிரந்த கர்த்தாக்களும் பித்தாகுரஸ் என்னும் இவன் அநேக இடங்களுக்குச்சென்று அநேக சங்கதிகளைத் தெரிந்து அல்லது கற்றுக்கொண்டவனென்று நற்சாக்ஷி பத்திரம் கொண்டிருக்கிறார்கள். கீழ் தேசங்களை முதலில் யாத்திரை செய்தவர்களில் இவன் ஒருவன். பிலினி என்பவன் சொல்லுவதாவது. புத்தன் என்றவார்த்தை கிரீக்கு பாஷையில் பித்தாகுரஸ் என்று பெயரிடப்பட்டது. ப்ரின்செப் என்பவனும் பாக்கக் என்பவனும் இவன் சாக்கியமுனி அதாவது புத்தனுக்கு சிஷ்யனென்றும் அவனோடு எல்லா கிரியைகளும் செய்து வந்தவனென்றும் சொல்லுகிறார்கள். இவன் சொந்தஊர் போய்ச்சேர்ந்த கொஞ்சநாளில் கிரீட், ஸ்பார்ட்ட தேசங்களுக்குப்போய் கடைசியில் இத்தேலி தேசத்தில் தென்புறமாயிருக்கும் குரட்டோனா என்னும் ஊரில் வாழ்ந்து டாரிக் அல்லது இத்தேலியன் பள்ளிக்கூடமொன்று ஸ்தாபித்தான். ஒருகாலத்தில் அந்த பள்ளிக்கூடத்தில் 300-மாணாக்கர்கள் தத்துவ சாஸ்திரத்தைப்பற்றியும் மதசம்பந்தம் அற்ற நீதி சாஸ்திரத்தைப் பற்றியும் வாசித்துவந்தார்கள். அந்த பள்ளிக்கூடம் அவனுடை வாழ்நாள் வரைக்கும் அதிமேன்மையாக நடந்தேறி வந்தது. ஆனால் தேசாசார கலகத்தில் ஷை பள்ளிக்கூடம் எடுபட்டு போய்விட்டது. உடனே அவன் லாக்ரியர்களிடத்தில் ஓடி அங்கிருந்து மெட்டப்பாண்டம் என்னும் ஊருக்குபோய் அங்கே அவன் 80-வது வயதில் இறந்தான். பித்தாகுரஸினுடையசிஷ்யர்கள் அதிமேன்மையாகவும்

புத்திசாலிகளாகவும் இருந்தார்கள். பிராணிகளினுடைய அவயவங்களையும் அவைகளின் செய்கைகளையும் கிரீக்கில் முதலில் கண்டு பிடித்தவர்களில் பித்தாகுரஸ் ஒருவன். இவனுடையசிஷ்யர்களில் ஹெராக்லிட்டிஸ், டெமாக்ரிட்டிஸ் என்னும் இவர்கள் அவன் செய்த ஔஷத வைத்தியத்தையும் அங்காதிபாத சாஸ்திரத்தையும் அநேகமாய் விரிவு படுத்தினார்கள். பித்தாகுரவினுடைய சிஷ்யர்களில் இவர்கள் பெயர்போனவர்கள். ஹெரூடிக்கஸ் என்பவன் முதலில் சிலம்பம் வித்தையை கண்டுபிடித்து பிற்பாடு வைத்திய சிகிச்சையில் சேர்த்தான். டெமாக்ரிட்டிஸ் என்பவன் அங்காதிபாத சாஸ்திரத்தில் அதிக புத்தியைச்செலுத்தி மனித பிரேதங்களைப் பிளந்து பார்த்தவன். ஹெரூக்லிட்டிஸ் என்பவனுக்கு ஹெரூடிக்கஸ் என்பவனுக்கும் ஹிப்பாக்றட்ஸ் என்பவன் சிஷ்யனாகஇருந்தான். இவன் பித்தாகுரவினுடைய அநேக தத்துவநூல்களை உபயோகித்து வந்தான். இவனுடைய சாஸ்திரமாவது தண்ணீர், மண், காற்று, நெருப்பு ஆகாயம் என்று ஐந்து பூதங்கள். இதை ஆதிநாள் முதல் இந்தியாவில் இந்து தத்துவ சாஸ்திரிகளும் [illegible]ர்மாவில் உள்ள புத்தர்களும் இப்போது இருக்கப்பட்ட சைனர்களும் அநுசரித்து வருகிறார்கள். இவன் கணித சாஸ்திரத்தைச்செய்து முடித்தான். மறுஜனனம் உண்டு என்பதை இவன் நம்பினான். ஷை நம்பிக்கை இந்திய ஞானிகளாலும் புத்தர்களாலும் இவனுக்கு உண்டாயிற்று. இந்த கொள்கையை இப்பொழுது உள்ள இந்தியர்களும் புத்தர்களும் நம்புகிறார்கள். மேலும் இவன் மாமிச பக்ஷணம் செய்கிறது பாவம் என்றான். குரட்டோனவில் ஒரு பெண்ணை விவாகம் செய்து [illegible]லாக்கஸ் நிசார்க்கஸ் என்ற இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றான். அவர்கள் அவனுக்கு சிஷ்யர்களாக இருந்தார்கள். இன்னும் அவனுக்கு டோமா, மியா என்ற இரண்டு பெண் குழந்தைகள் இருந்தன. ஷை குரட்டோன பள்ளிக்கூடம் எ[illegible] பிறகு லைசிஸ் ஆர்ச்சிப்பஸ் என்பவர்கள் ஷை சாஸ்திரங்களை ஒழுங்குபடுத்தி வைத்திருந்தார்கள். ஆனால் அது இன்னும் வெகு ரகசியமாய்க் காப்பாற்றப்பட்டு வருகிறது.

இச்சரித்திரம் சர்ஜன் ஜெனரல் எட்வார்ட் பால்பர் என்பவர் எழுதியது. இங்கிலீஷிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.

கிரீக்தேசமென்பது யூனானி தேசம். அதில் பிரதான நகரம் ஆதென்சு. Athens ஐரோப்பாவில் உள்ளது. பித்தாகுரஸினுடைய சிஷ்யர்களினுடைய சிஷ்யன் ஹிப்பாகிறட்டஸ் Hippocrates இவரை தேவனென்றும் வைத்தியர்களுக்கு தகப்பனென்றும் ஐரோப்பாவில் முதலில் வைத்திய வாகடம் உண்டாக்கினவனென்றும் யூனானி அச்கீம் ருக்மானென்றும் சொல்லப்படுகிறது. இன்னும் பித்தாகுரஸ் மூலியமாக அநேகர் (Philosophist) தத்துவ சாஸ்திரியுமானார்கள். இன்னும் வேதாந்தம் நீதிநூல் கற்று அநேகர்கள் ஞானிகளானார்கள். தத்துவம் வேதாந்தம் வைத்தியம் இம்மூன்றும் அந்நாள் முதல் இந்நாள்வரை திருத்தப்பட்டும் விபரீதமாக்கப்பட்டும் வருகிறது. அதினாலத்தேசம் செல்வமும் சுகமும் வளர்ந்தோங்குகிறது. இந்து தேச கல்வி பித்தாகுரஸ் மூலியமாய் மிகவும் பெருமையாய் விளங்குகிறது.

பூர்வகால ஒற்றுமை முயற்சி.—

பாரதகண்டமேபண்டுநாள்மனுடர்கள்
பத்திமிகுபுத்திமிகவாம்
பலவிதக்கல்வியாற்பலவிதத்தொழில்களும்
பருவூக்கமிகுசெல்வமாந்
தாரகப்பெருக்கிந்துதேசமேசெல்வமுஞ்
சனசகோதரநேசமாஞ்
சாதிபேதங்களறச்சமயபேதங்களறச்
சகலருமொற்றுமிடினார்
[illegible]கல்வியிற்செல்வத்திலிந்தியா
திரமாகநிலைநின்றதே
திங்கானசாதிமதபேதங்களாகியுந்
திக்கற்றநாடாகியே
நேரானவொற்றுமைக்கல்வியூக்கங்களு
நெறிசெல்லவலியற்றதே
நேரிந்துகல்வியைக்கற்பதிற்கிரேக்கரு
நேரானலக்சாந்தரே.

இந்துமுன் கல்வித்தன்மை.

இந்துதேசங்கலியிருபத்துவேழுநூ
றிவ்வாண்டுவெருடவரையி
லித்தேயமன்னியர்களாண்டதிலேசுயமாக
விந்துக்களரசாட்சியாஞ்
சந்ததமுமிந்துவிற்சரஸ்வதிபெருக்கினும்
*சகதேவிகடமாடினுள்
சர்வகலைஞானமேகல்லாமலிந்தியா
சாசுபதிஎத்தேன்சுபோய்
அந்தமிகுகல்விகள்வளர்ந்தோங்கவாக்கினுள்
அலக்சாந்தரிங்குவந்தார்
அன்றுமுதலிந்தியாவன்னியர்களாட்சியி
லாங்கிலமாட்சிகலமே
எந்தெந்தத்தேசமுமேகினுங்கலைமகள்
இங்கிலாண்டேநிலைத்தா
ளெண்ணேதுகைத்தொழிலேந்திரக்கலைஞான
மெளிமையறகற்கலமே. (14)

விபரீத தத்துவ கலை ஞானக் கல்வி.

தாபமேன்தத்துவங்கலைஞானபுதுவழி
தற்காலங்கோடிகோடி
தாமசிக்காமலேயூரோப்புசென்றுமே
சகலமுங்கற்றுவரலாம்
விபரீதபொருளாகும்வித்தையைக்கற்கலாம்
விக்கினமொன்றில்லையே
வியாபாரமென்னவதுவுலகாளவில்லையோ
விரிகடற்சென்றுதேடு
சாபல்லியபுதுவழிசடதத்துவநூல்களாஞ்
சகலதொழிலிதிலாகுமே
சார்பானவதிகாரயோகங்கள்முழுமைக்குந்
தற்காலமனதத்வநூல்
பாபமோயிக்காலந்தோல்மிகுதியாபாரப்
பலனென்னகுறைவாகுமோ
பாழானதொழில்கட்டையாங்கிலியர்நீக்கினுர்
பாரெலாஞ் செல்வமுறவே. (15)

*சகதேவி-செல்வம்.

மேல்தாக்கல்வி யியல்பு.

மேலானகல்வியால்விபரீதமாகுமாம்
மேற்கல்விசெப்பொணுதே
மேல்தாக்கல்வியாலுபயோகநன்மையாம்
மேற்கல்விசெப்பல்நலமே
காலங்கட்கேற்றபடிகருணைதருமாங்கிலியர்
கல்வியைக்கற்கலவத்தார்
காருண்யகர்சனேமேல்தரக்கல்வியைக்
கற்பிக்கமனமில்லையாங்
கோலமிகுசித்தர்முன்மேல்தரக்கல்வியைக்
கொடுத்தார்பிழைக்கவழியாய்க்
கோமான்கள்மெய்க்கவேசிமான்களாக்குமே
குறைவற்றமேற்கல்விதான்
தாலமதிற்கைத்தொழிலேந்திரத்தொழில்முதற்
றடங்காட்டுமேற்கல்வியே
தாழ்வானவிந்தியாமேலாகமேற்கல்வி
தடையறக்கற்கநலமே. (16)

ஆரோன் நல்ராசித் கல்வி விருத்தி. 749-1259-வரை.

அரபிசெயவீரரிலாரோன்நல்ராசித்
தரசாண்டகாலமதனில்
அகிலத்தின்மேலானநன்மையேகல்வியென்
றழித்தபொருளெக்கில்லையாம்
பரவுபகாரமாபரீதிநூல்வைத்தியம்
ப[illegible]வெனுந்தத்வநூல்
பகுதாதில்சாத்திரங்கல்லூரிதாபித்து
பகுத்ததின்பொருளுரைக்குந்
திரமானபுலவரும்பண்டிதப்பெரியோர்க்குத்
தெவிட்டவேபொன்கொட்டினர்
திருகல்விபரவுமுன்னக்காலமைரோப்பு
திடங்கல்விகுறைவுமிகவாஞ்
சரமாரியாகவேகல்விசாத்திரமெலாஞ்
சகத்தினைரோப்பில்பரவ
சார்பாகவாசர்பின்னரசர்க்குமிதுவேலை
சதுர்நூலுவருடவரையே. (17)

தற்கால முற்காலக்கல்வி விவரம்.

முக்கால முன்னோருமளவற்றகல்வியு
முண்டாக்கினார்புதுமையாய்
மூலபாடைகளாலுமரிதானசாத்திர
முறைகோடிதுறைகோடியா
யெக்காலமும்மறிவதுவானகல்வியை
யெவருமெளிதாயறிந்தா
எற்கையில்யாங்கற்றகல்வியைமுன்னோர்கள்
யெவருமேகற்றதேது
இக்காலமற்பர்சிலரிழிவாகமுன்னோரை
யேசினார்பேசினாரா
மிவ்வுலகமனிதருமுன்னோர்களல்லாம
லெங்கிருந்தானார்களோ
அக்காலமனிதருமரிதானகல்வியா
லதிகவயதோவாழ்ந்தா
ரானாலுமற்புதமங்கிலவயித்திய
மாயுள்சுகமற்பமாமே. (18)

கலவியறிவு-இயல்பு.

ஓர்வயதுப்பிள்ளைகளோர்பத்துமாணாக்க
ரோர்பாடமோர்கல்வியை
யூட்டினவுபாத்தியாரவர்கட்குநாளுமே
யோர்பேதமில்லாமலே
சீரானபிள்ளைதான்தெரிந்தேயுரைத்திட
சிலபிள்ளைசெப்பவில்லையாஞ்
சிலபிள்ளைபாடமும்மேற்கோளுரைக்கவே
சிலபிள்ளைகாலரையுமாம்
மேற்செப்புமாணாக்கரனைவர்க்குமோர்பாட
மெல்லோர்க்குவாத்தியொன்று
மேதினால்மாணாக்கர்பேதமாய்க்கற்றது
மியல்குணம்வெவ்வேறுமாம்
பார்நிம்பமூன்றியேபால்தேனூட்டினும்
பழமாகிநிம்பமீயும்
பாலரிடகுணம்வேறுபடிப்புமொன்றானதே
பரமகுணவித்தையாமே. (19)

கல்விச்செயற்கை யறிவு.

நன்மைமிகுகல்வியுமுபயோகநன்மையாம்
நற்குணச்செல்வமாகும்
நல்வழியோக்கியநுட்பறிவதாகுமே
நற்றுணைக்கல்வியாகும்
என்னுளுங்கல்வியேமெஞ்ஞானதீபமாம்
மேலானவானந்தமாம்
மேதினிமனுடர்கட்கற்புதக்கல்வியா
மெங்குமேபுகழாகுமே
தன்மையுமிரக்கமுஞ்சகலபெ[illegible]யவுஞ்
சதமானகல்வியாகுஞ்
சகலருங்கற்கரொங்கல்வியேயவசியஞ்
சன்மார்க்கவேதவழியா
மென்றுமேயழியாதுயெல்லையருங்கல்வியா
லெதுசெயவுந்திடமாகுமே
யெதுவினுஞாபகவிலக்கணக்கணிதமு
மெல்லாந்தருங்கல்வியே. (20)

கல்வி பழக்க வறிவு.

கல்விதானருமையாங்கேள்வியேயற்புதங்
ககனமுதலசரிவாக்குக்
கனிமறையேமுதலறிவுகனநாதமில்லாமற்
காதுகேளறிவில்லையே
புல்லானரூபரகுகந்தமுதற்பொருளெலாம்
புறமறி[illegible]க்குமறிவாம்
[illegible]ானவெளிபறிவுதெரிவிக்குமறிவாகும்
புறவறிவறிவுக்கறிவதாஞ்
சொல்லறிவில்லாமற்கல்வியறிவாகுமோ
சுயமாகவறிவதேது
சுயமானவறிவுபுலனெட்டாதுவற்பமாஞ்
சுயவறிவுமறைப்பறியுமோ
வல்லவனுநுட்பமுமண்டமுதலண்டமு
மந்தரவரம்பறியுமோ
மாசற்றசோதியேநின்கல்விசித்திய
மழியாதவறிவுளோனே. (21)

அறிவின்றன மியல்பு.

அருமையாம்மனிதர்க்குமறிவானபுத்தியே
அறிவுமனுதேகமுள்ளாம்
அரூபமேயறிவாகுமறிவுலெக்கெண்ணே து
அனைத்தையுமறியுமறிவாம்
மிருகவகைபெரிதானமீனிற்றிமிங்கிலம்
மீனனையவிழுங்கும்
மேதினியிலானமீன்மூளையினிடைபார்க்கின்
மேற்கவினுர்மூளைகனமே
கருவானமனுமூளையறிவினதுமூலமாங்
காணுணிலதிலற்பமாங்
கல்வியில்மங்கையர்க்கதிலற்பமூளையாங்
கனசேய்களதிற்கொஞ்சமே
பெருகிடுஞ்சீவவகையாவினுமனுவறிவு
பிசகறப்பெரிதானதே
பெரிதானவுலகிற்குவரிதாகமனிதரைப்
பிறப்பித்தசோதிமயமே. (22)

மூளை.

மனிதர் கபால ஓட்டுக்கடியில் பலமான சவ்வால் மூடப்பட்ட மூளையானது நாலு பிரிவினை யுடையதாயிருக்கிறது.

ஞாபகம், சித்தம், அறிவு.

இவைகளிருக்கிற ஸ்தானம் மூளையேயாம். சகல உணர்ச்சிகளுக்கும் மூளையே பிரதானம். தற்காலம் அங்கசோதனை வித்தையில் அடிக்கண்டபடி மூளையைப்பற்றி குறிக்கிறார்கள். மூளையின் கனம், மூளையின் சராசரி நிறை வளர்ந்த புருஷனில் 49½-அவுன்சு வளர்ந்த ஸ்திரீயில் 44-அவுன் [illegible] 5-அவுன்சுக்கும் 6-அவுன்சுக்கும் உட்படவிருக்கும். புருஷனில் பெரும்பாலும் 46-அவுன்சுக்கும் 53-அவுன்சுக்கும் உட்படவிருக்கும். ஸ்திரீயில் 41-அவுன்சுக்கும் 47-அவுன்சுக்கும் உட்படவிருக்கும். புருஷ மூளைகளில் ஆக கனங்கொண்டவைகள் 65-அவுன்சும் ஆக கனங்குறைந்தவைகள் 34-அவுன்சு நிறுக்கப்பட்டன. 191-ஸ்திரீ மூளைகளில் ஆக கனங்கொண்டவைகள் 56-அவுன்சும் கனங்குறைந்தவைகள் 31-அவுன்சும் நிறுக்கப்பட்டன. ஏழுவயசு வரைக்கும் மூளை சரியாய் வளர்ந்து பருக்கும். அதுமுதல் பதினாறு இருபது வயசு வரைக்கும் பதமையாய் வளரும். அது

முதல் முப்பது நாற்பது வயசுவரைக்கும் மெத்த பதமையாய் வளரும், அதின்பின் அதற்கு வளர்ச்சியில்லை. நாற்பதுக்கு பிந்திய காலங்களில் வயசு கதிக்க மனோகரணங்கள் குன்றி மூளை படிப்படியாய் கனங்குறைந்து பத்து வருஷத்திற்கு ஒவ்வொரு அவுன்சு வீதமாய் குறையும். இத்தன்மை ஆண் பெண் இருபகுதியாருக்கும் சரி.

மூளையின் பருமை ஆளுடைய மனோ விவேகத்திற்குத்தக்கதாக இருக்கும். கூவியர் என்பவருடைய மூளை 64-அவுன்சுக்கு கதிக்க[illegible]கப்பட்டது அபசிரம்பி என்பவரது மூளை 63-அவுன்சு கனமும் துபிரான் என்பவரது மூளை 62½-அவுன்சு கனமுமாயிருந்தன. பேதையருடைய மூளை 23-அவுன்சுக்கு கதிப்பது அரிது. யானை திமிங்கிலத்தைவிட மற்றெந்த மிருகத்தின் மூளையிலும் மனிதனின் மூளை அதிக கனங்கொண்டது. யானை மூளை 128-அவுன்சுக்கும் 190-அவுன்சுக்கும் உட்படவிருக்கும். 50-முழ நீளமுள்ள திமிங்கிலத்தின் மூளை 80-அவுன்சுக்கு நிறுக்கப்பட்டது. மூளையின் தொழிலைப்பற்றியும் மூளையில் உள்ள பதார்த்தங்களைப் பற்றியும் விவரிக்க இச்சிறுநூல் இடந்தராது. அவுன்சு என்பது இரண்டரை ரூபாய் நிறையுள்ளது. அங்க சோதனை வித்தை என்பது அனோட்டமி (Anotomy).

அறிவினுபயோகம்.

அறிவதுவேநன்மையாமறியாமைதீங்குமா
மறிவுபெருநன்மைநீதி
அறிவுதான்சீவனுமறிவுபுலனுடையதா
மறிவதேவியற்கையறிவாந்
தெரிவிக்குமறிவானகல்விகேள்விக்குமே
தேகம்புறமானவறிவாந்
தேகவறிவில்லாமற்கல்வியறிவாகுமோ
தேகறிவுபெரிதாகுமே
பெரியநன்னிலைமையுமறிவேபகுத்தறியும்
பிரிவினைகளறியுமறிவாம்
பெருமைமிகுசெல்வமும்பேரின்பகல்வியும்
பேருபெறுமறிவாகுமே
விரிவானவுலகினிலறிவானமனிதர்க்கு
வேண்டுவதெலாங்கிட்டுமாம்
விள்ளரியவின்பசுகவுபயோகஞானமும்
விளைவிக்குமறிவாகுமே. (23)

அறிவினுவமானம்.

அறிவானபுத்திகளனேகரிடமுண்டுமே
யதனியல்புவறியநலமே
யருமைமிகுபுத்திகளனேகவிதமாயினு
மனைத்துமோரிடமில்லையே
பெரிதானவுடலொன்றுவவயவம்வெவ்வேறு
பிரிவினையநேகமுண்டு
பேசரியவவயவமுபயோகமெத்தவாம்
பேரரியபுத்தியிதுபோற்
சிறிதானவுயிருக்குமறிவானவவயவஞ்
சீரரியபுத்திமிகவாஞ்
சிலவறிவுவிழிபோலுஞ்சிலவறிவுசெவிபோலுஞ்
சிலவறிவுகைபோலுமா
ரிதானபுத்திகளவசியமவசிய
மதுவிலார்செவிடுகுருடே
யற்புதாவொப்புவமையற்றகுணநித்தனே
யாதிநற்குணமருள்கவே. (24)

மேலோரின் குணவியல்பு.

மண்ணுலகமாந்தர்க்குமளவற்றகுணமதில்
மாகுணமூன்றுவென்றார்
மற்றுமேகுணமில்லையோவென்றுநவிலவே
மனதிட்டகுணமென்பர்பொய்
யெண்ணரியநல்லோருமேலானநற்குண
மென்றுமேசெப்பினோர்கள்
இயல்பானகுணமறியவெத்தனையவசிய
மெல்லோருமெச்சுகுணமாம்
அண்ணலாம்பெரியோரினரிதானபுத்தியே
யவசியமெனக்கணித்து
அவசரந்தருகவெனவதுவகைதசமென
வரிதாக செப்பினோர்கள்
பண்ணரியவேதநெறிபற்றற்றமூடர்க்கு
பகருகுணமறியவென்றே
பத்தானவிவரத்தையடுத்துநாமுரைசெய்வோம்
பாமரர்க்கரிதாகுமோ (25)

மேலோர்குணம் பத்து.

தேவதாபத்தியேவிசுவாசநம்பிக்கை
தேவவழியானகுணமாந்
தேகமுதலெல்லாமறிகின்றவறிவொன்று
தெளிவாகுகல்வியொன்று
பாவனைய்தாகவுமயிக்கமென்பதுவொன்று
பழுதற்றவாசாரமும்
பாரிலுறுநீதியுமானமென்பதுவொன்று
பகரரியகிருபையொன்று
கோபமறுபொருமையுங்கோதிலாவலியொன்று
கூறினார்பெரியோர்களே
கொள்கையோவெவ்வேறுகுறைகுணநிறைகுணங்
கோடானகோடிகுணமாம்
பூவினிற்புத்தரும்பத்தென்றுகூறினர்
பூர்வகற்பனைபத்துமாம்
புகழானகட்டளையிந்துகுணமோர்தசம்
புகலுவாரறிதாகுமோ. (26)

(1) தேவபத்தி, (2) அறிவு, (3) கல்வி, (4) அயிக்கம் எனும் ஒற்றுமை, (5) ஆசாரம், (6) நீதி, (7) மானம், (8) கிருபை, (9) பொறுமை, (10) வலிமை.

மனிதகுண பேதவியல்பு.

ஏகனிடசிருட்டிகளெண்ணரியவற்புத
மேதினுங்குணமற்புத
மெண்ணரியமாந்தருமெண்ணரியகுணமதை
யெவருமேசெப்பவரிதே
போகமார்தோற்றப்பிராணியின்குணமெலாம்
பூதலமனிதகுணமே
புல்பூண்டுசெடிகொடிதாவரகுணங்களும்
புகலுவார்மனிதகுணமாஞ்
சாகரம்பூதமுத்தாதானகுணமெலாஞ்
சாற்றவேமனிதகுணமே
சகமோடேலோகவகைநவமணிக்குணமெலாஞ்
சர்வகுணமிந்தநாதா
யூகமிகுமாதியேயுன்னருளையுன்னும
லுரைக்கிறார்தர்க்கமிகவே
யுருவமெனவருவமெனவொன்றெனப்பலவென
வுலகிலிதுதர்க்கநெறியே. (27)

மனிதகுண வியல்.

அரிதானமனிதரைவெவ்வேறுவதனமா
யருளினதோர்விந்தையாகு
மதினுமனுமுழுதுமேவெவ்வேறுகுணமாக
வமைத்துளதுவிந்தைவிந்தை
திரிகுணமதாகவேசிலகுணமல்லாமற்
றிக்குணமிலக்கில்லையே
தீயவருமோதியேகல்வியாற்றேறினுந்
தீயோரின்றிங்கதிலமே
நெறியானகல்வியைக் ற்காதபேர்களு
நேரியல்புநல்லவர்களாம்
நீதிமுறைகற்றுமே டவாதபேருக்கு
நிறைகல்விகுற்றமேது
அறிவான*கத்தையு கழினின்வீழ்கவே
யதுவேவைகுண் மென்பார்
அற்புதாநின்றுலமை குணமளவில்லை
யாச்சரியதர்க்கநெறியே. (28)

நன்மை விசாரிப்பு.

ஆதிமுதல்நன்மைக்கிலக்குவரையுண்டோ
மதினிறமுமுருவுமுண்டோ
அரிதானவேதமாவேதத்திநேவலா
வன்றியதுவெதிலடங்கும்
நீதியேநன்மையாநியாயசன்மார்க்கமா
நினைவறிவுநன்மையாமோ
நிலையானநன்மையாதற்காலமுற்காலம்
நியமிப்பெலாம்நன்மையா
ஆதியின்நன்மையாமனிதரிடநன்மையா
வகம்புறம்நன்மையாமோ
அங்கமுள்நன்மையாவங்கவெளிநன்மையா
வங்கமோநன்மையாமோ
பேதியாப்பெருமையும்பொறுமையும்நன்மையா
பேரறிவுமெய்நன்மையா
பேரழகுநன்மையாபேச்சுமோனங்களும்
பேசவும்பின்புபாரே. (29)

---

*கத்தை—கழுதை.

நன்மை விசாரிப்பு.

ஆனந்தவுபகாரவுட்யோகவுமான
மாலோசனைநன்மையா
வான்மாவதிர்ஷ்டவிதிவாசைதானன்மையா
வயிக்காபிமானநன்மை
ஞானபரிசுத்தமும்புண்யோபகாரமு
நவிலும்பராக்கிரமமும்
ஞாயமாபலபேரிஷ்டமேநன்மையா
நயதருமதயவுநன்மை
சீவகாருண்யமுந்தேவ்காருண்யமுந்
தேவனைத்தொழுநன்மையா
தேவசித்தங்கல்விதேவபத்தியுநன்றி
தெளிதலேநன்மையாமே
மானிடர்மனப்பொருளிலொருணநன்மையது
மனிதர்செயலோர்பாகமும்
மண்ணுயிரைநன்மையாக்கவும்போக்கவு
மாட்சிமையிநாதனே. (30)

நீதி விசாரிப்பு.

நெறியாகுநீதியதுலக்குவரையுருவேது
நீதியஃதெதிலடங்கு
நித்தனிடநீதியாசித்தமிடநீதியா
நிலையானவேதநீதி
யுரித்தானவேதமதிற்தற்காலமுற்கால
முறைவேதமேவல்நீதி
முன்னீதிபின்னீதியுபயோகம்நீதியா
யுபசாரம்நீதியாமா
அரிதானநன்மையாவன்புக்கடுத்தசா
வாரியகுணம்நீதியாமோ
ஆதிமனுநீதியோநற்கருமநீதியோ
ஆர்தருமம்நீதியாமோ
சரியென்றுசெய்வதும்நடப்பதுநீதியா
சன்மார்க்கநடைநீதியா
சாசுவதமழியாதசுகுணபரிசுத்தனே
சாவத்தையாளுமரசே. (31)

இதுவுமது.

பண்புமிகுபத்தியும்பாரோபகாரமும்
　　பரிசுத்தம்நீதியாமோ
பலபொருள்சுபாவத்தையறிவதேநீதியா
　　பலபெருக்கம்நீதியா
மன்னரசர்தன்னிட்டசித்தமும்நீதியா
　　மனவிருப்பம்நீதியா
மானதென்னெங்கணிதமுமீவிக்கணமுநீதியா
　　மனதடக்கமுநீதியா
இன்பமேநீதியாயிடம்பொருளேவலும்
　　இதமானவார்த்தைதானோ
இகமதனின்மனிதர்குணமெண்ணற்றபேதமா
　　யிருப்பதேவிந்தைவிந்தை
எண்ணரியதெய்வமுமெண்ணரியமதமார்க்க
　　மெண்ணற்றநீதியாகு
மேகனேயழியாதவன்பனேநீதியே
　　என்றைக்குமாளுமரசே. (32)

இதுவுமது.

மண்ணுலகமனிதரைக்காப்பதேநீதியா
　　மாறுதமெய்நீதியா
மனிதரின்சுககவனகல்வியும்நீதியா
　　மானமிகுநீதியாமோ
சன்மபுவியதிகவிதமொழிலாக்கல்நீதியா
　　சாதிமுறையானநீதி
சந்தர்ப்பம்நீதியோபொறுமையும்பெருமையுஞ்
　　சனநீதிராசநீதி
புன்மையறுபுத்தியாய்ச்செய்வதேநீதியா
　　புகழ்பராக்கிரமநீதி
பூலோகமனிதரின்காலநிலைக்கேற்றதாய்ப்
　　புதுநீதிபுதுமையாமே
அன்புமிகுநீதியாமடங்காதகோபமோ
　　அன்புசினமத்யமாமே
ஆதியேயழியாதவாச்சரியநீதியே
　　யனைத்தையுங்காக்குமரசே. (33)

இதுவுமது.

யார்க்குமுறுநீதியும்மன்னரசர்நீதியு
மாசனப்பொதுநீதியு
மளவிடக்கூடாததிட்டங்கள்மெத்தவா
மன்னரிடசித்தநீதி
யார்க்கும்பொருள்சீவனத்தொழிற்பொய்நீதி
யழிவானவுலகநீதி
யாவருமனுவுமன்மன்மனுவுமாகவே
யற்புதச்செயல்செய்வரோ
தீர்க்கமாய்மனுடர்கள்கடையானகாலத்திற்
றிடனற்றுமன்னுவரே
செயமானநீதிதான்மனுக்களிலோர்பாகஞ்
செயல்தனிலேயொடுங்குங்
காத்தானுபூரணதயாபரச்சோதியார்
கணக்கிலாதுயிர்புகழுமே
கடவுளேநின்கருணைநீதியேநித்தியங்
கருதரியவேதமுதலே. (34)

பூர்வகால நீதிகள்

முன்னாளிலரசர்கட்கெண்ணற்றநீதியா
முறைகோடி துறைகோடியா
மூனமூக்கறுப்பதுமுனைநாக்கறுப்பதுவும்
மொழிவிரல்கள்துண்டிப்பதுஞ்
சின்னபின்னமாகக்கைகாலறுப்பதுஞ்
சிரச்சேதனமிருதியாஞ்
சித்ரவதையுலகத்திலில்லாதவிடமில்லைச்
சிலுவையுமரத்தறைதலாங்
கண்காதுசேதனங்கடியபற்சேதனங்
காரிகையின்மார்சேதனங்
கற்பழிவுமாண்பெண்ணுறுப்புகள்சேதனங்
கார்குழல்களுஞ்சேதனம்
மன்னரசர்நீதியால்வருடமொருமலைபோல
மனுடவுறுப்பைக்குவித்தார்
மட்டற்றகாலமாயின்னீதியுலவொ்லா
மறைநீதியாய்நின்றதே. (35)

பூர்வமன்னர் சரிகட்டு நீதி.

தாரணியிலாண்டமுன்னரசர்க்குநீதிகள்
தாரசுநிறைகோல்நீதியாந்
தாடையிலடிப்பரைத்தாடையிலடிப்பதாந்
தடியடிக்கோர்தடியடி
காரணமிலாமலேகைகாலொடித்தோரைக்
கைகாலொடிக்குநீதி
கல்லாலடிப்போரைக்கல்லாலடிப்பதுங்
கண்ணினுக்கோக்கண்களாம்
திரமாய்ப்பற்களையுடைத்தாலுடைப்பதுந்
திருவேதநீதியிதுவாந்
திணையினிலிதுநீதிவருடநாலாயிரந்
தீர்க்கமாய்நிலைநின்றதே
ஆரம்பநீதியிக்காலமதிலில்லாம
லரியதற்காலநெறியா
மரசாண்டுவாசாரநெறிநின்றுவருவது
மற்புதக்காலசெயலே. (36)

பூர்வீக நீதிகள்.

முழுநிலமுமாசாண்டமுற்காலநீதிகள்
முதுசடிமிலாறடிகளா
முண்டித்துமூத்திரச்சட்டிகளுடைப்பதா
முகமதிற்றுப்புவதுமாங்
கழுத்துக்கெருக்குஞ்செருப்பாலேமாலையாங்
கழுதைமேலூர்கோலமாங்
கழுமரத்தேற்றியுங்கல்செக்கிலாட்டியுங்
கடுந்தீயிற்கொல்லுவதுமாம்
மழுவால்வதைப்பதும்மலைமீதுருட்டலும்
மாபுலிக்கிரையாக்கியு
மட்டற்றகொதியால்கொதிக்கின்றகொப்பறை
மாண்டிடப்போட்டிடுதலாம்
நழுகாதமட்பாரி[illegible]டுவேயுருட்டியும்
நா[illegible]தயுதிமோட
நட[illegible]கண்டவரைகல்லாலெறிந்துமே
நடத்தநேவேதநெறியாம். (37)

பூர்வ நீதிச்செயல்.

பாரதனையாண்ட முன்னரசர்க்குநீதிகள்
பலமுள்ளயானை மிகவாம
பதியவேகண்டவனை மனுவைப்புதைத்துமே
பழியானைகாலில் மிதித்
தூரமேசிரசுகள் துண்டித்துவோடவே
துட்டர்க்குநீதியிதுவாந்
துண்டமாய்மனிதரையிரண்டாய்ப்பிளப்பதுந்
துண்டுதுண்டாக்கியேயறித
தூரார்திடுக்கிடவுயிரோடுக்கிட
வுயிரோடுமேபுதைத்
துயரத்திலேவைத்துமனிதரைக்காலா
லுதைத்துமேதள்ளிவிடுதல்
தீரமாய்மனிதரைச்சிச்சுடுஞ்சூளையின்
றீயினுக்கேயிரையுமாந்
திருவேதநீதியாயாண்டுமூவாயிரந்
தினைமீதுநிலையின்றதே. (38)

பூர்வவரசர் கடனியல்பு.

மண்ணுலகையாண்டமுன்னரசர்க்குமனிதர்கள்
மட்டற்றநாளடிமையாய்
மன்னர்க்குமனிதர்கள்கடனுழிகடமையா
மாட்சிமையிதீதிபெரிதாங்
கண்ணேற்றவரசர்க்குமெண்ணேற்றநீதியாங்
கட்டியேகிட்டிபோட்டுக்
கடும்பகலிலேகுனிந்தண்ணேந்தாளிட்டுமே
கல்லுகளைமுதுகிலேற்றிச்
சண்டாளர்கையாற்சவுக்காலடித்துமே
சரீரங்கள்புண்ணாகவே
தழைவானதும்பையின்சார்விட்டுநாசியிற்
சாபிணம்போற்கிடத்தித்
திண்ணமாய்த்தீவினைக்கடனுவியற்றிடச்
சேர்ந்தார்களுடன்படவுமாய்த்
தினமடிபிடித்துமேதிருவாணைமறியலாந்
தினையாண்டவரசநெறியே. (39)

அ[illegible]மை விலை [illegible]தீ.

அடிமையாய்ப்[illegible]ணுணை விலை[illegible]கக்கொள்வதும்
அரிதானவேத[illegible]நறியா
மடிமைகொண்ட[illegible]லென்ன[illegible]லைக்கரும்புபோ
லாட்டுவார் துன்பமிகவே
கொடுந்துன்பமாகவேகோதை[illegible]லைகொண்டுமே
கோட்டாலையேசெய்கு[illegible]ர்
கோட்டைமதிற்கோபுர[illegible]குளமாறுபாலங்கள்
கொண்டுமிககாவுபலி[illegible]ய
கடுகேனுமதியாமலடிமைய[illegible]ங்கர்ப்பிணியைக்
காரியப்பலியிடுதலாங்
காளிபேய்பூதங்கள்[illegible]ணதரவடிமையைக்
காவுபலியேசெய்[illegible]ர்
நாடுநகர்முழுதினுமடிமையின்கொடுமைகள்
நடைபாண்டுநான்காயிர
நலமற்றவரசினும்பலமற்றவடிமையை
நடத்துகிறதுன்பமிகவே. (40)

பூர்வவரசர் யுத்தவியல்பு.

அந்நாளிலரசருக்கெந்நாளுஞ்சண்டையா
யக்குடிகள்வனவாசமா
யாளடிமைசிறையாகியளவற்றகொள்ளையா
மனியாயகொலைகளதிகம்
முந்நாளின்மனிதருக்கென்னாளுந்துன்பமா
மோரிடமுநிலையில்லையாம்
முண்டுகளுடுத்தியேகுன்றுசெடிகுடிசையில்
முடங்கிப்படுத்திடுதலா
[illegible]ன்னதான்செய்வார்களொத்தொழில்களற்றுமே
யேங்கிமடிவார்கள்மிகவா
மெதிராளியச்சமுந்திருடரிடவச்சமு
மெப்பவுமரசர்பயமே
அன்னைகமுறுமிருகசர்ப்பபயமதிகமா
[illegible]மங்லையில்லையா
மன்றரசர்சண்டையின்மனிதர்க்குத்துன்பமோ
ரளவுமேசொல்லொணாதே. (41)

பழையராசநீதி.

செங்கோலேநீதியாம்பிரமாணசத்தியஞ்
செகமாளுமன்னர்கோலாஞ்
செகமனிதருயிரையும்பொருளையுங்காக்கின்ற
செகதருமநீதிமலனும்
பொங்குகடலுலகதனையாண்டரசர்லெக்கிலைப்
பொய்நீதிகொலைகொள்ளையே
பொய்யாதகடவுளும்புகழரசருதரமதிற்
புகுந்துமேமனிதவடிவாய்ப்
பொங்கவனியெங்குமேதமதுநெறிகடவுளாய்ப்
பூவுலகையாண்டார்களாம்
பூவுலகிலிவர்செய்தகொள்ளைகொலைலீலைகள்
புகலக்கணக்கில்லையே
யெங்கிலுங்கடமையால்சீவித்தகடவுள்தான்
என்கடமைவிட்டொண்டார்
ஏகபரவொளியானதயாளகுணநித்தனே
எனதுகடனுன்பணிதலே. (42)

முன்கால ராசநீதி.

நிலமதனில்வெகுமன்னரற்புதப்பிறவியாய்
நீண்டநிலமாண்டார்களா
நிலையானகடவுளும்மறுவடிவமாகியே
நெடுங்காலங்கண்டார்களாம்
உலகாக்கல்கடவுளேயில்லையெனவரசர்கள்
யுத்தங்கள்பூண்டார்களா
முலகில்வெகுமன்னர்கள்கடவுள்நானென்றுமே
யுலகபழிசெய்தார்களாம்
பலமானகடவுளிடநேசரும்தாசரும்
பார்புகழைக்கொண்டார்களாம்
பாரெலாமிவர்காலமிவர்கடவுளில்லையெனிற்
பதியெலாஞ்சங்காரமே
பலவரசராண்டென்னகொள்ளைகொலைநீதியே
பணமீந்துநீதியேது
பற்றற்றநீதிபாகிருப்பாரின்நீதியே
பணிதலேகடமையாமே. (43)

பழைய ராசநீதி.

ஆணவப்பெருமையோவெகிலம்தையெனதென
வாண்டவெகுமன்னர்மன்று
யாருக்களெக்கில்லையநீயாயநீதிக
ளளவிடவுமிடமில்லையே
தானுக்குநிட்டமும்பேராசைவஞ்சமுந்
தன்குலப்பெருமைநீதி
தந்திரச்சூதுபகைமந்திரத்துரோகமுந்
தனமாசைராசநீதி
வீணனபேதமும்பொருள்விசரமோசமும்
வெங்கொடுமைபழிபாவமும்
வெறியரசர்நீதியாற்பெருகுவரிலக்கில்லை
வின்னுவரியீயநீதி
மானமறவரிசுமைமறுக்காதெதர்க்கவு
மதியமதிற்கொலைகொள்ளையே
மண்ணரசர்நீதியாமாதேவனின்கருணை
மாறுதநிலைநீதியே. (44)

பண்டையகால ராஜநீதி.

உலகமதிலெவர்பூமியெவர்பொருளுமெனதென
யுத்தசெயசக்ராதிபன்
உலகிலெளியோர்களும்வலியவர்க்கடிமையா
முலகில்வலியோர்க்கிரையுமாம்
புலம்பித்திடுக்கிடப்பூலோகமன்னனெனப்
பொருள்பூமிமறுவடிமையாம்
பூவுலகையாண்டென்னகொள்ளைகொலைலக்கில்லை
பூமியிறைவாங்கியுண்டு
இலவசமேயெளியோர்க்குமுபகாரமில்லையா
மெவருமேயீவதேது
இவ்வுலகில்மறைநீதியாக்கினைக்கொலைகளா
மிதமுடனிரக்கமிலையாம்
அலகைகுணவாணவப்பட்டமேயரசனு
மாக்கினைநடத்துகோமா
னரியதவபலனால்கிடைத்ததராசாங்கமே
யரசாங்கமேநரகமே. (45)

இந்து[illegible]பழமொழியுண்டு அது மகண்டிருக்கிறது. பொய்யானுலும் ஜனங்களுடைய அபிப்பிராயத்தைக்காட்டுகிறது.

அருந்தவத்தின்பலன் இராசாங்கம்
இராசாங்கத்தின்பலன்எழுநரகம்.

அரசர்கள்நீதி முற்காலப் பெரியோர்கள்.

மாதவப்பெரியோர்கள்வல்லனொருகடவுளென
வையமதையாண்டார்களா
மாகாயவெளியிலேதேவனிடவார்த்தையா
லகிலத்தை யாள்கைசெய்தார்
நாதனுக்கொப்புவமைவைப்பதேபாவமென
நாடெங்குஞ்சண்டைமிகவா
[illegible]டுகள்செழிக்கவெகுலோகவுபகாரசுகம்
[illegible]டத்தினவரசர்மிகவாம்
வேதநெறிபெரிதென்றுபோதிக்குமன்னராம்
வெற்றிபலமுள்ளவர்களா
மெங்குமேமலிதரைத்தம்போலுமெண்ணியே
வெகுதுன்பநீக்குமரசாம்
பாதகமிலாதபெரியோர்களுமரசரும்
பகுபத்தியாக்கினர்கள்
பாரில்முன்னரசரில்நீதிமான்மெத்தவாம்
பகரவுமெளிதானதோ. (46)

சாதுரிய வியல்பு.

சகமீதுபுகல்கின்றசாதுரியவசனமே
சாதுரியமுபயோகமாஞ்
சாதுரியமேநலஞ்சாமர்த்யவாக்குமாஞ்
சாதுரியநாகரீகஞ்
சுகமானசங்கத்திலொருவர்பதிலுரையாமற்
சொல்வதேசாதுரியமாந்
தூயகுணநேசனுயுருக்கமாயுண்மைபோற்
றோனவுரைசாதுரியமாம்
புகழானசாதுரியசமையவுச்சிதவாக்குப்
பொய்ப்புளுகுவஞ்சமாகும்
புதுமையாய்ப்பிரமிக்கப்புகழாலுமகிழாலும்
புகலுவதுசாதுரியமாம்
இசையின்மணி கரையு[illegible]படி[illegible]கிற
விதங்களேசாதுரியமா
மிவ்வுலகில்மேலானதொழிற்சிவனோர்த்தமா
மியம்புவதுசாதுரியமே. (47)

சாதுரியம்.

அரசரின்சாதுரியமமைச்சரின்சாதுரிய
மாசிரியர்சாதுரியமு
மறிஞரின்சாதுரியமனுமானசாதுரிய
மதிகாரசாதுரியமும்
பிரசங்கசாதுரியம்பிரபுவின்சாதுரியம்
பின்னும்வெகுசாதுரியமும்
பிறர்மெய்த்தசாதுரியம்பிசகானசூதிவைகள்
பிழைப்பானசாதுரியமே
புமனிதர்போற்றவேபுகலுவதுநீதிபோல்
பொய்யுலகிற்பொய்நன்மையாம்
புகழானமனிதரும்புதுமைபோல்சாதுரியம்
போக்கோடுபுகலுவார்கள்
பரிபாசசாதுரியமதுமேயல்லாமற்
பரமிடம்பலிதமாமோ
பாரோபகாரமும்பத்தமொடுநன்மையும்
பழுதற்றசாதுரியமே. (48)

ஊக்கமுயற்சிவலி.

சீவநிலையாலெல்லாமாகாரமழிவதாஞ்
சீவதொழிலாகாரமாஞ்
சீவனுக்காகாரமென்னளுமுள்ளவரை
சீராய்நடப்பதிலையே
தேவமுனியாகிலுமுயற்சியாற்போசனந்
தேடாமலடைவதேது
தேசவுயிர்யாவுமுயற்சியாற்போசனந்
தேடியேசீவிப்பதாற்
பூவுலகிலாச்சரியசெல்வமிகுநன்மையும்
புகழாய்முயற்சிதருமே
புதுமையாய்மனிதர்க்குவேண்டுவதெலாந்தரும்
பூரணமுயற்சியதனாற்
பாவகத்தேகமும்[illegible]முயற்சியற
பயனற்றதவமாகுமே
பழுதற்றதேவனின்வல்லமைமுயற்சியாற்
பாரெலாமுயற்சியாமே. (49)

ஒற்றுமை உரிமை.

பற்றானபிரபஞ்சவாழ்விற்குவொற்றுமைப்
பலனருமிருதன்மையாம்
பக்குவமியாவர்க்குமொற்றுமைபேரீதியாய்
பலமானசெயல்செல்வார்
எத்தரிலேவாழ்வுவருமொற்றாலேவாழ்வுமா
மேற்றமிகுமொற்றுமையுமாம்
எவ்விதச்சாதியினுமெவர்வருமொற்றுட
லென்றுஞ்சுதந்திரமுமாஞ்
சுற்றமுடனொற்றுமையுந்தேசவொற்றுமை
சுயமானதொழிலொற்றுமை
சூதானமாகவேசுபமானவல்லமை
சுளுவாகவொற்றுமைதரும்
மற்றவர்களொற்றுமையெத்தனையிருக்கினு
மாதேவரின்னொற்றுமை
மாறுநித்தியசுகானந்தவாழ்வாகு
மாதேவவொற்றுமையுமே. (50)

மனிதர் தொழிலியல்பு.

என்னென்னவாச்சரியமேந்திரங்கைத்தொழி
லேதேதுசெய்தார்களா
மெக்காலதொழில்களுநிற்கவிலைபுதுமையா
மெதுசெய்தூநிலையில்லையே
வுண்மையாயோரணுவையாக்கவுமழிக்கவு
முலகிலெவராலுமாகா
தொருவியற்பொருளையேசெயற்கைபொருளாக்கினு
னுச்சிதமனிதர்செயல்தான்
மண்மணற்பொன்செய்யமயிர்செய்யநெற்செய்ய
மரங்கள்புற்பூண்டுகொடிகள்
மற்றுவகையெதையுமேசெய்யவொருவல்லமை
மனிதராலாவதிலையே
யன்பாகமனிதர்க்குப்பய[illegible]
மாக்கினனச்சரியமா
யாதிபொருளில்லாமலணுவளவுமாகுமோ
வற்புதக்கடவுள்செயலே. (51)

வல்லமை.

வையமதின் வல்லமையரிதானநன்மையாம்
வலிமையேயரசாகுமே
வல்லமைமுயற்சியேயரிதானசெல்வமே
வாழ்வுமிகவுண்டாகுமாம்
பொய்யுலகசீவனத்தொழிலாகவல்லமை
புகழானகைத்தொழிலுமாம்
போகசுகயோகநிலையானதாரணந்தாம்
பொருதுசீவனுதாரமாம்
மெய்வலுவருந்தாலேசீவனுக்குமென்றும்
மேவரியிலியாவுமாகும்
மேலானவலிமையேயானவப்பெருமைதான்
மேலோர்கள்நன்மைசெய்வார
ஐயவோவல்லமையழிந்துபோம்பொய்யுலகி
லதற்குமுன்னிலையில்லையே
ஐயனேயாச்சரியமெய்யனேநின்வலிமை
யழியாதுவலிமையோனே. (52)

அடக்கம்.

மனிதரிலடக்கமேயுயர்வானநன்மையாம்
மதிப்பானபயன்நீதியா
மானிடவடக்கமேயதிகவிதசெல்வமா
மடங்காப்பெருந்துன்பமாம்
பணியாதவாணவப்பற்றறடக்கமே
பரிபூரணச்சித்தியாம்
பாரினிலடக்கமிகுமேலானபதவியாம்
பணிதலேமேலாகுமாந்
தணியாதபாவிகளுயர்ந்தாலுமென்னவது
தட்டலைவாரீழாகவே
தாரணியிலரசரேயாகினுமவர்கட்கு
தருமநெறியாலடக்கம்
இனியேதடங்காதவர்பின்னுணவ
ரைக்கப்படுதுன்பமிகவா
மிறைவனேயாணவமடக்கவுமொடுக்கவு
மேகாந்தநாதரீயே. (53)

மானம் அபிமானம் வெட்கம்.

மண்ணுலகவாழ்க்கைக்குமானமேவெகுநன்மையாம்
மரியாதைமிகுகீர்த்தியாம்
மானமரியாதையிலுமுபயோகமதிகமாம்
மதிப்பதிகநேசமிகவாம்
நண்ணியவொழுக்கமுஞ்சீர்வரிசைசங்கையு
நலந்தருமபிமானமும்
நலமானமேன்மையுமகலாதவின்பமு
நாடிடுஞ்செல்வமிகவே
பெண்ணாசையற்றதவப்பெரியோர்கள்மானமதைப்
பேணார்களெந்நாளுமே
பேசரியவுலகினிற்பேராசையாணவம்
பேணினுந்துன்பமிகவே
அண்ணலாஞ்சோதிக்குமானமும்வெட்கமிலை
அகிலர்க்குமானமிகுவா
மழிவற்றசுத்தபரிபூரணத்தயாபரா
வழியாதகீர்த்திமுதலே. (54)

ஊழ்விதியினியல்பு.

ஒப்புவமையில்லாதகடவுளின்சித்தமா
யூழ்விதிநேமித்ததா
லுயிராதிகடவுளிலையுயிர்தேகமாக்கவிலை
யுயிர்நாள்கள்செய்வதிலையே
எப்பொருளேயாகினுமுற்பவநிலையழிவு
மில்லாதபொருளில்லையே
ஏகனருள்சிட்டிகளிவில்லாததொன்றில்லை
இறைவனேநித்யமருள்வான்
தப்பற்றதேவநெறிகாலமொருபொருளையுந்
தவறவேவிடுவதில்லையே
தயாபரச்சித்தமேநித்தியமநித்தியந்
தன்செயலிலாவதில்லையே
செப்பரியவூழ்விதிதேவசெயலாமாஞ்
செகசெயற்காலவளவாஞ்
செயற்கெலாமேதுநீதிவினையுகப்பதிலை
செகரட்சகாதிமுதலே. (55)

பல சென்மமியல்பு.

பாலகவாலசயேபலவிதச்சனனமாம்
பாவமிகசனனமிகவாம்
பலவாசையின்பங்களாலேத்தோர்கேமோக்கமாம்
பலசராசரங்களெல்லாம்
பூர்வீககன்மத்திற்பூவினில்மனிதராய்ப்
புரளுதவிலக்கில்லையாம்
பூலோகபெருமளெலாமனிதராயுதித்திடு
போசனப்பொருள்மனிதமே
தீர்மானமாயெய்ச்சிட்டித்தமனிதர்செய்
திவினைக்கேதெண்டனை
தீரகமனிதரைவேவ்வேறுசிவனுய்ச்
சிட்டித்ததில்லைநிசமே
நேரானசத்தியக்கடவுளின்சிட்டிப்பு
நெறிதப்பிமாறுததே
நெறியாகயாவையும்விசாரிக்கும்வல்லவ
நேமிப்புமோட்சநரகே. (56)

பொறுமை, பொறை.

புத்தியின்வித்தானபொறுமையேபுண்ணியம்
புகழருமைபொறுமையாகும்
பொதுவானயோசனைக்காதாரமானதாம்
பொறுமையறவறிவுபாழாங்
கத்திவேலம்புக்குக்கேடயக்கருவிபோற்
கனதுன்பமாற்றிவிடுமே
கனிவானசித்தரும்பெரியோர்கள்முத்தருங்
கருதினர்பொறுமைமிகவே
இத்தகையபொறுமையறவெண்ணரியதுன்பமா
மேகுவார்பாவவழியே
யிகபரமிரண்டிற்குமெச்செல்வமுங்கிட்டு
மிதமானபொறுமையாலே
எத்திசைமாந்தர்க்கும்பொறுமைவெகுநன்மையா
மெவையினும்பொறுமைவேண்டு
மெக்காலுமழியாதசோதியின்பொறுமையா
லெப்பாவமும்மகலுமே. (57)

மெய்மை.

வாய்மைமிகுநன்மையாமரிதானநீதியாம்
வையமதிலுபயோகமாம்
வாக்குமனமொன்றானவாய்மையேசத்திய
மழியாதவாய்மைபெரிதாம்
பொய்யானவுலகினிற்பெரியோர்கள்மெய்யோதிப்
பொல்லாங்குபழியாகினர்
போக்கற்றபொய்யர்க்குவாய்க்காதுவாய்மையே
பொய்க்கேமெய்போலுமாம்
மெய்யான்பெரியோர்கள்மித்தையதுசெப்பினு
மேலானநன்மையாகும்
மேதினியிலாசையாற்பொய்பேசுமூடர்கள்
மிகுபழிகள்கேடுசெய்வா
ரையனின்னருள்பெருகவனைவர்க்குமுபகார
மானவழிமித்தைநன்றே
யரிதானமெய்வாய்மைகொண்டுநிலைநிற்கிறது
மற்புதாசின்றனருளே. (58)

பொய்.

மெய்யெனக்காண்கின்றசர்வபொருள்பொய்யுமா
மெவருமேபொய்யாகுமே
மெய்யானதொழிற்சாதிபட்டமதுபொய்யுமா
மேதினியெலாம்பொய்யுமாம்
பொய்யானவுலகமதிற்பொய்நீதிநன்மையாம்
பொய்யுலகிலுபயோகமாம்
போக்குகளிறிந்துமேவாக்குவல்லமையினாற்
பொய்யதுவேமெய்போலுமாம்
ஐங்கவிப்பெரியோர்கள்மித்தையேசெப்பினு
மதுபிறர்க்கேநன்மையே
யானாலுமேபெரியபொருளாசைவஞ்சக
மறிந்துமேசெய்யொணாதே
வையகமெலாந்துதிசெப்பூணே [illegible]ன்னிடம்
வஞ்சகர்கள்துன்பமிகவே
வஞ்சகப்பொய்யாலேமனிதனைமருட்டினல்
வல்லோய்நீவிடுவதில்லையே. (59)

பெருங்கோபம். சினம்.

தீவிரக் கர்பமேதீநஞ்சுவாள்போல
    தீக்கமாமுயிர்போருமே
  தீதானகோபம்வரிலறிவுமானம்மேது
    தீயவழ்பாவமாகும்
பாவியெனுங்கோபியைச்சாபமிடுமுலகமே
    பகைகுற்றம்ாளாகுமே
  பாவுகிறவுதிரமுங்கா ..குமெசன்றுமே
    பஞ்சமெபாறியறிவுடங்கும்
பூவினிலாகிரிக்கோப்பானகோபமாம்
    புத்தியறமல்யுத்தமாம்
  புத்தியறுங்கோபமாய்செய்தவினை பின்னெணில்
    புகலிலாத்துக்கமாகும்
ஆவிபோம்நரகினித்தணியாதகோபியை
    ஆழ்த்திவிடும்பொறுமைநாடு
  அற்புதாகோபியெனவாக்கவும்போக்கவு
    மமைத்தாளும்நாதரீயே. (60)

சிறுகோபமியல்பு.

சினமேதுமில்லாதசாந்தகுணசீலர்க்குச்
    சிறுகோபமுபயோகமாஞ்
  சிலசமயமுலகநடைசிறுகோபநன்மையாஞ்
    சீர்திருத்துங்கோபமாந்
தினநீதியாக்கவுமற்பசினமாகுமாந்
    திகழ்பராக்கிரமகோபந்
  தீதானமனிதரைத்திருத்துவதுநீதியாந்
    திணபாடமாக்கல்சினமாங்
குணமற்றமட்டியைக்குணமாகச்செய்வதுங்
    குணசவுக்கேகோபமாங்
  கொலைகளவுபொய்சூதுகொள்ளைமுதலறியவே
    குணமானகோபநன்றும்
மனச்செயலிலொன்றனகோபமேயுறைவிடம்
    மனுக்களிடமோர்பாகமே
  மாதேவகோபியெனவாக்கவும்போக்கவு
    மாருதிருபையோனே. (61)

கிருபை, தயவு.

அன்பான மனிதர்கட்கிலமே தயவாகு
மன்பிலார்க்குலகு பகையா
மருளான தன்மமேயினத் தினுமுதனன்மை
யன்புளோர்க்காதியருளா
மென்றுமேயசரமொடுசீவசெந்துகளான
தெதுவினுந்தயையுண்டுமே
இரக்கமறுபாவகெ... ரமி... ண்டில
யேகுவார்பாவவழியே
வுன்னரியபதவிதருமுலகமேநடைபெறு
முதவியாங்கிருபையாலே
யொப்பிலாப்பெரியோர்களுயர்வான கருணையே
வுத்தமமிகப்பெரியதே
சன்மமோடிறப்பின்பு துன்பங்...
தயாளகுணமுதலாதியே
சாசுவதமழியாதுநின்கிருபைநிதியஞ்
சகலவுயிர்களும்வாழுமே. (62)

பெருமை, மகிமை, மாட்சிமை.

பொய்யானவுலகமதிற்பொய்யானபெருமையைப்
புகலாதாரில்லையில்லை
போக்காகுமனிதரின்பெருமையேநன்மையாம்
புகழானபெருமைநீதி
செய்தொழிற்பெருமையாஞ்செயசீலபெருமையாஞ்
செட்டுவாதாயபெருமை
செகமதிற்பெருமையாற்சீவனமுபயோகஞ்
செகவெளிப்பெருமைவேஷம்
வையமதிலறிவழுகல்வியும்பெருமைபல
வல்லமைப்பெருமையாகும்
வாழ்வைசுவரியமும்வைத்தபோ...பட்டமு
மாண்டவர்கள்பெருமைமிகவே
மெய்யற்றபெருமையாற்மேதினிகொலைகொள்ளை
மெத்தவும்பாவ்வழியே
மேன்மைமிகுமெய்யனெறின்பெருமைநித்திய
மேன்மைதருநீதியோனே. (63)

புகழ்ச்சி, துதி.

புகழானகீர்த்தியைப்பொய்யுலகமனுடர்கள்
பொருந்தாதவரில்லையே
புகழானமனுடர்கட்குபபோகநீதியாம்
பூகலத்தொழில்சேவனஞ்
சகமீதுகீர்த்தியாலாண்டாசிலக்கில்லை
சகலருமாண்டார்களாஞ்
சாசுவதம்நிலையற்றபொய்யா புகழ்நீதி
சதமேநுமனுவ்வையோ
தேகவுயிர்புகழறிவுசிட்டித்தவல்லவொரு
தேவனுக்கேபுகழெலாந்
தேகநிலைகுலைவாகில்மாயுமனுப்புகழேது
திரமற்றபொய்ப்புகழுமா
மிகபாருமழியாத [illegible]
மென்றுமேயழியாததே
யெளியேனையிகழவும்புகழவுமாக்கவொரு
யேகாந்தநாதநீயே (64)

ஆங்காரம்.

பரிசானவாணவமாங்காரபெருமையாம்
பாரில்யான்பெரியனென்றே
பலவுரையுரைத்தலேயுபயோகநன்மையாம்
பகுதொழிற்பேர்நீதியா
மரிதானமனுசென்மமியாவருஞ்சமமதே
யானதாற்பெரியரிலையே
யனைவருஞ்சிவனத்தொழிற்சாதிபட்டங்க
ளாக்கினார்மிகவாழ்கவே
பெரிதாகயாவருமொத்தாள்கவோநாளும்
பெரியருஞ்சிறியர்வேண்டும்
பெருமையுமொன்றுமைகொண்டோடைப்பதும்
பெரியரின்கீழ்ப்படிதலாஞ்
சரியாகவுலகமனுவெல்லாம்பெரியரெனிற்
சகவாழ்வழிந்துவிடுமே
சனனமரணங்களில்நிர்வாணமனுடனே
சதாபெரியநாதநீயே. (65)

பொருளியல்பு.

ம[illegible]கச்செம்பொன்குவித்திட்டிருந்தாலு
[illegible]ஞலேவாழ்வில்லைபோ
மாறிடும்பொன்ஞலேமதிவிதிகளாயுனை
மாருமற்செய்வதில்லையே
நிலைகெட்டமூடர்க்குப்பொருள்வரபிறர்கட்கு
நிந்தைபழிதீதுசெய்வார்
நீதிமான்பொருளாலேயு[illegible]பகாரியாய்
நிலையானநன்மைசெய்வார்
கொலைபாவசெயலுக்குவழியானபொருளது
கொடுந்துன்புமாக்குபொருளாங்
குடிவெறியிலாகிரிக்கொப்பானபொருளுமாங்
குலைவாகுமனநிலைமையைக்
க[illegible]லுமெட்டி[illegible]க்கர்த்தனி[illegible]டிபொருள்
கண்டவர்தனதுபொருளோ
கர்மத்தினிற்பாவபுண்ணியப்பொருள்ரெண்டுங்
கடையானதன்பொருள்களே. (66)

உலோபரியல்பு.

இழிவாயுலோபருமழியாதபொருளென்று
மிச்சையாய்ப்பொருள்சேர்க்கவே
இவ்வுலகதொழில்களிலேறப்பட்டுமுயல்வது
மிகமனிதருபயோகமாம்
வழிகெட்டலோபிகள்வையத்திருந்தாலும்
வருமானமுபயோகமாம்
வம்பானலோபருமீயாதபத்தராய்
வாழ்வுபொன்னிலையென்றுமே
[illegible]ழிவானகந்தையுமிழிவானகூடுண்டு
காசைப்புதைத்தலோபர்
கழுதைபோற்றமுண்டொருவருக்கீயாத
கடைகெட்டலோபர்மிகவா
மழியாதகடவுளுமகிலத்திலியாவர்க்கு
மாக்கினர்சுகசெல்வமே
யற்பமாம்பொருள்தேதுணையென்றுநம்பியே
யருளற்றுநரகாழ்வரே. (67)

மோசவஞ்சனையியல்பு.

வஞ்சனைத்தொழிலாலேசீவிக்குமனுடர்கள்
வையமதிலெக்கில்லையே
வாழ்வானசெல்வங்கள்மோசத்திற்பெருகினால்
வஞ்சனைகளேமெச்சுவார்
கஞ்சிக்கேவழியற்றுமோசநாசமானார்
கனவிலுமோசநாடார்
கடன்வாங்கிமோசமுங்கன்னவட்டிமோசமுங்
கள்ளமோசங்கள்மிகவா
நஞ்சானவஞ்சகத்தொழிலாலேசீவன
நடந்தால்சிலநன்மையா
நாடதனில்வாழ்கின்றவரசுமுதற்றோட்டியு
நாடுறார்மோசமிகவே
யஞ்சாதவஞ்சக[illegible]வியாயமேதொழி
லன்பானதன்மைசெய்வா
ரழிவானமோசத்தைநம்பினாலிழிவாகு
மரசானநிதிமுதலே. (68)

தூஷணம்.

மறைவானமானமதைத்தூற்றுகிறபாவியை
மற்றோர்கள்தூற்றவருமே
மற்றவரின்மானமறைக்கின்றபுண்ணிய
மானமரியாதைபெருகுங்
குறைநீதுகுத்திரந்தான்செய்வதென்றுமற்
கூறுவார்யாவரையுமே
குவலயமெலாங்குற்றங்கூறுவதும்பாவமே
குற்றமற்றோரில்லையே
முறையிலாதெவரையுந்தூஷித்துமகிழ்வது
முன்மகிழ்ச்சிபின்துன்பமே
முட்டுமுடைதூஷணையாருக்குவாராது
முழித்தால்விடுவதில்லையே
கரையற்றகுற்றம்விசாரிக்கும்வல்லன்
கடுகேனும்விடுவதில்லையே
கடவுளைநம்பியேமன்னிப்புக்கேளாத
கடினர்க்குமோட்சமில்லையே. (69)

பிணக்கு, யுத்தம்.

நேரற்றவுலகமிதுபோரற்றுநிற்பதில
நெறியானயுத்தநலமே
கெடுகலுந் துன்பமாய்கொடுமையனியாயமாய்
நிற்குநாள்போர்நீதியாம்
பாருலகிலுண்மையாய்ப்பா[illegible]மாய்ப்
பராக்கிரமயுத்தவரசர்
பலவழிசமாதானமன்னிப்புமேன்மையாம்
பகைசண்டைதீங்குகெடுமே
சார்வானபொருளாசையாணவச்சண்டைகள்
சதிமோசமானதோடு
சதிகொலைகள்பாதகம்வஞ்சனைப்போர்களுஞ்
சாபமிகுபோர்நீங்குமாம்
ஆருத்தஞ்செ[illegible]கவாள்கைநிலைநின்றதோ
அனைவர்க்கும் நிலையில்லையே
அண்டமுதல்யாவையுமழித்தாக்கவல்லவா
வழியாதசெயசோதியே. (70)

தேவச்செயலியல்பு-மனிதசெயலியல்பு.

நம்பிக்கைநாணயஞ்செல்வாக்குலாபமு
நாடினதெலாங்கிடைத்தால்
நாமெத்தவல்லவன்நற்புத்தியூக்கமு
நான்செய்தடைந்தசெல்வ
மெம்போலுமற்றவர்களாவதிலையெங்குமே
யென்பராஞ்செல்வமற்று
லெளியராய்த்தொழிலற்றுமேளனமிருக்கவே
யேகநின்செயலென்பரே
வம்பானமாந்தரும்வாழ்வாலேயாணவம்
வையமதிலெக்கில்லையா
மாச்சரியகடவுளினுபகாரமெண்ணு[illegible]
வஞ்சகர்கள்துன்பமிக்வே
இன்பசெல்வத்தினலெனதுசெயலென்பது
மிடுக்கனுறகடவுள்செயலோ
இகபரமிரண்டிற்குமீந்தவிறையோனையே
யெக்காலுமெண்ணல்நலமே. (71)

பொறாமை காய்மகாரவியல்பு.

மூடரினுவப்பானகாய்மகாரங்களால்
முடியுமுயிர்பொருள்கெடுதலா
முழுதினும்பழியாகும்பொறாமையாற்கெட்டவர்கள்
முதுலகில்கோடிகோடி
கேடானகாலத்திலழுக்காறுகொஞ்சமோ
கேள்வியுஞ்செவிகொள்ளுமோ
கேட்காதபேய்பித்துகொண்டாடுநாளுமே
கெடுதியும்வறுமைமிகவே
மாடாடுதானியம்வீடுமனைமக்களும்
மாளவைத்திடுமெரிச்சல்
மன்னரசர்தண்டமுமின்னல்மிகவுண்டாகு
மதியார்களுலகுதனிலே
வீடானசொர்க்கமுநாடாதுநரகினில்
வீழ்த்திடும்பொறாமைநன்றோ
வீணானபொறாமைகொண்டென்னபயனுருகுமோ
விபரீதநிலையில்லையே. (72)

வறுமை.

மண்ணுலகமாந்தர்க்குவறுமையொருபத்தியாம்
மரணபயமோவில்லையா
மானமடக்கிமிகவாசையுமொடுக்குமா
மன்பானபொறுமைமிகவாம்
பொன்னற்றவருமையாற்பத்திநிலைநின்றியும்
பொருளைத்திருத்தமிகவே
பொருளேதுமில்லையேயில்லையேயிறையெனப்
போற்றித்தியானமிகவாம்
நுன்னுமிடியாளனல்லடக்கமும்வணக்கமுந்
தரும்பேறும்பொருளதென்பர்
தடியேதுதொழிலேதுசோறுவதுகிட்டாத
துயரமேமேலுமேலாய்
யென்றுமேதுன்பெனுமிடிமைதானெவரையு
மெப்போதுமொழிவதில்லையே
இறைவனென்னழியாதமேலானதிருவரு
ளென்றறைக்குமின்பசகமே. (73)

விவகாரம்.

பிணக்கானசெகத்திலேவழக்காலேநட்டமே
பிறதருமஞாயநலமே
பிராணிகள்வழக்கினும்பொருளதுவழக்கினும்
பிரமவிபிபோல்முடியுமே
யுணவால்வழக்கிடும்பூனையேகுரங்கிட
மூணவழக்கிட்டகதைபோ
லுழலாமன்முன்பினுயொற்றுநடவாதவ
ருலகினிற்கோடிகெட்டார்
தண்மையுறுநீதிபதிதாருபதிதன்னிலே
தனதானதீர்ப்புநலமே
சரியானபெரியோர்கள்தீராததீர்ப்பேது
தனநட்டமாவதிலையே
பணத்தாலேயாவர்க்கும்பொய்கள்மெய்யாகுமோ
பழுதற்றநீதிமுடிமை
பரமனேயாவையும்விசாரிக்குநீதியே
பரமானசோதிவடிவே. (74)

இருதமியல்பு.

மனதுமேசிந்தையாம்மனமதுவேயிருதயம்
மனதுமேசீவனென்பார்
மனதிருப்பிடமானஇருதயக்கமலமாம்
மாருதசலனமுடைய
தனதாமியங்குமிவ்விருதயச்செயலலாற்
சர்வாங்கவவயமசையுந்
தற்செயலாலிருதயஞ்சரேலென்றுநிற்கிலோ
சரீரமதுசவமாகுமே
அணுருதலண்டத்தினற்புதங்கண்டுமன
மரைநொடியிற்சென்றுவருமே
அற்பகாலமேனுமனதுக்குவோய்வில்லை
யனைத்தையுமெண்ணுமனமா
அனுதினமளவற்றபெரிதானமனமது
மாகாயவருபமெனவா
மளவற்றமனமாயமைத்தபெருவிந்தை
யற்புதாநின்றனருளே. (75

மனச்செயல்.

முறையேதுமில்லாதமன் தினிடசெய்கைதான்
முடியாததளவில்லையாம்
முட்டற்றமனமதுகட்டுகளிலாகுமோ
முறைநீதியற்றமனமே
நிறையறிவினில்லாதுநெடுமனச்செய்கையால்
நிகழுவதுபழிபாவமே
நிலையற்றமனமதுங்களிப்போடுதுன்பமா
ர்தருமிகுவின்வழு
மறைவானமனதிற்குஆசையொடுவெட்கமு
மடியும்வரைவிடுவதேது
மட்டுப்படாமனதுபுத்திசித்தங்களை
மதியாமல்மீறிவிடுமே
வரையேதுமற்றதொருமாவேகமாமனது
மடங்க
மாதேவவெனதுமனநன்னிலைமையாகவே
வந்தாள்கநிலைமையோனே. (76)

இதுவுமது.

கங்கேதுமில்லாதமனதினிடசெய்கையைக்
கருதவுமளவில்லையே
காணார்களொருவருங்காடெங்குமோடிடுங்
கள்ளக்குரங்குநிகரோ
தங்குபலவண்டமும்பிண்டமுஞ்சராசரந்
தனையுமேகண்டோடிடுந்
தவசிபெரியோர்செயுந்தவசினுள்சார்ந்துமே
தான்கூத்துமாடுமெனமா
மெங்குநீபோகேலிருவென்றிருத்தினு
மெங்குமேசுற்றுமனமே
யெவ்விதக்கட்டினுமடங்காதமனதுக்
கிணையேதுசெப்பலரிதே
பொங்கிடுங்கனவிலுமங்காதுநாளுமே
புகுமேவ மனமாம்
புகழ்மாமனச்செயற்பெரிதாதிசோதியே
புகலரியநீதியோனே. (77)

சித்தச்செயல்.

மனதெண்ணலாசையாமட்டிடுதல்சித்தமா
மனநேர்மைசித்தமாகும்
மதியூகமறிவுதான்விசாரித்தறிந்ததை
மகிழ்தலேசித்தசெயலாஞ்
சினமானகோபமெழுசித்தமேபொறுவென்று
சினமடக்குஞ்சித்தமாஞ்
சித்தமேதீர்ப்பிடுஞ்சித்தமேபொறுமையாஞ்
சித்தமேதர்க்கமுடிவாங்
கனஞானமனதுமேநல்லறிவுசினமெனுங்
கடையடக்குஞ்சித்தமாங்
கலையாணசாத்திரக்கல்விகேள்விகளெலாங்
கரைகாணநிற்றல்சித்தம்
அனதாலுமளவற்றவாதியின்சித்தமா
யனைத்துயிரும்வாழ்ந்தோங்குமே
யற்பமனுசித்தமேயாத்தியகலக்கமே
யாதரித்தாளுவாயே. (78)

சிநேகரியல்பு.

பணமில்லைநேசரிலைபணமிருந்தால்நேசம்
பயனடையுநேசர்மிகவாம்
பற்றுளநேசனும்பழிபாவநேசனும்
பாசாங்குபொய்நேசனுந்
தனதானநேசனுந்தற்காலமுற்கால
தருணமதுகண்டநேசன்
தாழ்விற்குநேசரிலைவாழ்விற்குநேசருந்
தாராட்டுவெளிநேசனு
மீனமானநேசனுமினிதானநேசனு
மிடைக்கிடைகசப்புமிகவே
யிதமானநேசரும்பாலியமழகிற்கு
மெண்ணற்றநேசர்மிகவே
குணமேகுணத்தோடுபருவங்கள்பருவமாய்க்
கூடிவதுவுலகநேசங்
குறைவற்றபூரணத்தன்பானவாதியின்
கூட்டுறவுநிலையானதே. (79)

பாஷை.

பார்மீதுமனுடரின்பாஷைகளனந்தமாம்
பார்மெய்த்தபாஷையதிலே
பரப்பிரமபாஷையேபரிசுத்தவேதமய
பழுதற்றசுயபாஷையாகும்
சீராகுசீவனத்தொழில்பாஷையாமரசர்
சிறப்பதிகாரபாஷை
சித்திபுத்திகளானமுத்திதருபாஷையாஞ்
செகமதனின்மேல்பாஷையாங்
கூறறிவேயல்லாமலாயிரம்பாஷையாற்
குணமாவதொன்றில்லையே
குணநீதியுமறியாதபாஷைகளுமில்லையே
குறிப்பானபாஷையேது
யாராகிலுந்தேவபத்தியும்வணக்கமு
மல்லாதபாஷையினே
யாதுயிருமெந்தெந்தபாஷையையுரைக்கினு
மருள்செயுங்கருணைவடிவே. (80)

பரிபாஷை.

பாரில்வெகுமனிதர்கள்மாகூட்டமாகவே
பரிபாஷைபயிலுவார்கள்
பலதொழிற்சாதிகட்குபயோகநன்மையாம்
பாரோபகாரமாகும்
நேரிலாப்பொய்சூதுகொலைகளவுமோசமு
நெறியற்றகொடும்பாதக
நெஞ்சறியவஞ்சகமார்க்கமாஞ்செயல்களால்
நேர்படும்பரிபாஷையே
ஆரியர்ஞானியும்பரிபாஷைபேசினா
ரதினாலுண்மையடைவர்
ரறிவீனமூடரும்பரிபாஷைபேசியே
யழிவானவிழிவுசெய்வார்
தேரிலாப்பேதையர்களறிவை[illegible]தெரிவைகள்
சேல்விழிப்பாஷையதிகஞ்
தெற்றுபாஷைகளேதுஞ்செல்லாதுசெல்லாது
தேவரின்பாஷைபெரிதே. (81)

116703

பரியாசவியல்பு.

பணிபூண்டமாதர்கள்பணியற்றமாதரைப்
பழிப்பார்கள்பரியாசமாய்ப்
பட்டாடைமாதர்கள்பாழ்க்கந்தைமாதரைப்
பார்க்கச்சிரிப்புமிகவாம்
தனிவீரகவேழையைத்தாழ்வுபரியாசமாய்த்
தனவான்களேபேசுவார்
தட்டற்றதீரர்மெலிவுண்களற்றரைத்
தாழ்வுபரியாசமிகவாம்
பிணிமூப்புச்சாக்காடுபிரிவினைகளேவரப்
பிரமித்துப்பேசார்களாம்
பிழைகேடுவறுமையாலன்னவத்திரமறப்
பேசார்கள்பரியாசமே
யணிமாலைநிலையேதுவன்னவத்திரமேது
வகிலத்தினிலையில்லையே
யாணவப்பெருமையாற்பரியாசதூஷிப்பு
மாதியின்றுன்பமிகுமே. (82)

அழகு.

அந்தமெனுமழகுக்குவளவுலெக்கெண்ணேது
வழகென்பதெதிலடங்கு
மழகதாய்க்கடவுளுமமைப்பதெல்லாமழகு
வரியமனுசெய்பொருள்களுஞ்
சந்தமிகுதானெனன்பர்கண்காட்சிமாயையைச்
சார்ந்துமேதுன்பமிகவே
சாற்றரியவழகெலாமனதினிலடக்கமே
தனியின்பமனதினுள்ளே
யெந்தெந்தவழகுமேபொய்நிலைமைநிலையேது
யெழிலாளையுடிமையாக்கு
மேகனிடசிட்டிகளனைத்துமேபொய்மாய்கை
யெக்காலமுமெதுக்கு
மந்தமெனுமளவுகளுமாக்கவும்போக்கவு
மற்புதாவுனதுசெயலே
யாச்சரியநேசகுணதேவனேநித்தனே
யழியாதவழகுளோனே. (83)

பெண்ணழகு, உபயோகம்.

சிறிதானபாதமும்பெரிதானதுடைகளுஞ்
சிறுமிடைப்பெருங்கூபகஞ்
சிறியவிதழாகிடுஞ்செல்விசிறுவாயழகு
சிறப்பான லட்சணமுமாம்
விரிவானபெண்ணழகுநஞ்சானகெம்தியும்
விக்கினமுமாகுமெனவாம்
வீணழகுநிலையேதுவெளிவேஷகிளையுமாம்
விவேகநடையழகுநிலையாஞ்
சரியானவழகுகளுப்யோகநன்மையை
சவுந்தரியமீவதேது
சடுதியாயழகற்றுமுடியுமவலட்சணஞ்
சகமனிதர்பரியாசமே
பாரில்மனவழகானவெண்ணற்றபெண்களே
பலநன்மையுபயோகமாம்
பாங்கானவடிவழகியுபயோகமற்பமாம்
பாரழகியதிகமிலையே. (84)

பெண்களினழகினியல்பு.

பாவையர்க்கல்குல்வெகுபூரித்தகடிதடம்
பகுமோகபிரமிப்புமாம்
பரவியேபூரித்துவிம்மிடுதனத்தையே
பகருவாராச்சரியமே
பூவையரின்வதனமேபூரணமதியெனப்
புகலுவார்வட்டவடிவைப்
புதுமையுளமான்முகம்முட்டைவடிவதனையும்
புகலுவார்செந்தாமரைப்
பூவைமிகரன்னமோமிகவுநலமென்பதாய்ப்
புலம்பினாரிலட்சணநூற்
பொய்யுலமாதர்முகமெண்ணரியபேதமே
புணருமின்பர்க்கின்பமாந்
தேவையுளவழகிகளழகிலாப்பெண்களுஞ்
செப்பவுங்கணக்கில்லையே
தெய்வமொருவழகேனும்பயோகமில்லாத
சிட்டிப்புவில்லைநிசமே. (85)

பெண்ணழகு.

வடிவானபெண்ணின துலட்சணமனந்தமா
மழகுலட்சண நூல்களின்
வகுத்தேயுரைக்கினும்வண்ண வுடலவயவ
மரிதானவழகுபெரிதாம்
படிமீதுவழகியாலுபயோகமற்பமாம்
பழிபாவகெடுதிமிகவாம்
பாங்கானவழகியால்மாண்டவர்கணக்கில்லை
பாரழகிகாவல்மிகவாங்
கொடிவரையிடைத்தனச்செல்விக்கபாயமே
கோடிதான்வருவதுண்டு
கோலமிகுமாதரைத்தூஷணவார்த்தைகள்
கூறுதிருப்பதில்லையே
அடிமரைப்பூவொத்தவழகியைத்தேடியே
யலைவரேமனநோவுமா
யழகென்றுதீபமதையணுகின்றவிட்டில்போ
லழகாசைமரணம்வரையே (86)

யர்மதானவுற்பவம்

துர்மலப்பையடியிற்றுர்ச்சலப்பைமேலுந்
துர்க்கருப்பைநடுவுமாந்
துடர்விந்துகிருமியது துர்க்கருப்பையினிற்
றொடர்ந்துமேபிரவேசமாம்
நறகருவுநஞ்சாகிகொடிமாவுமாகியே
நாரகசுமாலதேகம்
நாதனேதேகமதுசுசியேதுபெருமையோ
நவிலவுமற்பமற்ப
மற்பசுகவாசையில்வதனமதிசுந்தரம்
மடந்தையரைநாரியென்றார்
மாதுவெகுமோகமாமாடவரினுற்பவம்
மர்மத்தைபேசினோர்க
ளற்பமாம்பெண்ணாசைவிட்டதாபெருமையு
மழிவிற்குமாதாரமே
யற்புதாவுனதடிமையுடலுயிர்களுன்னதே
யமைத்தாளுசிவனேயே (87)

புருஷர்கள் பெண்கள் மோகவியல்பு.

புத்திமிகுபுருஷராம்பலமதிகபுருஷராம்
புருஷரிற்பெண்கள்குறைவாம்
புருஷராண்சிங்காரம்பெண்களடியாள்களாம்
புருஷவிப்சாரமில்லையாஞ்
சத்திமிகுபெண்களேமோகமிகவாகினுந்
தன்மனதடக்குவார்கள்
சகமதிலேபுருஷரோவிபசாரமதிகமே
தையலர்கள் குறைவாகுமே
குற்றமேவிபசாரங்கொலைகுட்டமீழையுங்
குணகேடுமாயுள்குறைவாங்
கொடியவாண்சிங்கரெனும்புருஷரின்மோகத்தைக்
கோதையரடக்குவார்கள்
மெத்தவுநபுஞ்சகமாண்களிலதிகமே
மெல்லியர்நபுஞ்சரில்லையே
மேன்மைமிகுதேவருமேலானநாதரும்
மெல்லியரில்வந்தவர்களே. (88)

புருஷர் விந்துநிலை.

வித்தானபீசமதுசந்தானவிந்ததனை
விளைவிக்குங்கருவியாகும்
விசர்க்கமாமலசலம்விந்துகழிவாகாமல்
வித்தற்றுவிற்பதில்லையே
நித்தரும்பீசமதில்விந்துவிற்பவமாகி
நிறையுமிந்திரியகுழலே
நீர்மலப்பையடியிலிந்திரியக்குழலுண்டு
நீர்துவாரத்தில்முடியு
மத்தபிரயோகமாமாசனப்புணர்ச்சியா
மசங்கியப்புணர்ச்சிவெகுவா
மாண்பாதிபெண்பாதியாகவொன்றாகாம
லகலாதுவிந்திரியமே
பத்தரினின்பமதைப்பத்தரேயடையவு
பத்தமரிடமில்லையே
பஞ்சுமனுவாகப்படைத்தவிந்ததனிற்கு
பரிசுத்தவிவாகமலமே. (89)

பெண்ணமுத நிலையியல்பு.

மங்கைக்குப்பூரணமோககாமத்தினால்
மதசலப்பெருக்குவொன்று
மனிதவுற்பவமாகநாதசலமொன்றுண்டு
மாதவிடைப்போக்குவொன்று
நங்கைக்குமூன்றுநீர்கர்ப்பாசயத்திலே
நாற்பதன்பதுவருடமே
நாரிகர்ப்பத்திலுநலிவுபாலீவதிலு
நழுவதுமூன்றுநீருங்
கொங்கையையமுக்கவேகுய்யமதூரிக்குங்
குப்யமோர்சூத்திரகொங்கை
கோதைமோகத்தானம்பின்சிரசுமூளையிற்
கொல்லுவரைவிடுவதேது
அங்குள்ளமூன்றுநீர்மாறினும்பெண்கட்கே
யாசைமோகங்கள்மிகவே
யாண்கள்பெண்கட்குமோவாசைமோகமற்ற
தற்பசெந்துவுமில்லையே. (90)

போகம், புணர்ச்சி.

பாவையருபத்துமேரெண்டுபோதிகளதிற்
பலவிதபோகமுண்டாம்
பட்சிவூர்வனமிருகபலவிதபுணர்ச்சிபோல்
பகுலீலைபடமுண்டுமாம்
தேவையுளபோகமதுபலவிதமில்லையே
தேய்ப்பழுத்தும்ரெண்டுதான்
தெரியாதசிறுவர்க்கும்பலவிதப்போகமெனத்
தெண்டமிடவைத்தவழியாம்
பூவையருபத்தமதிற்றேய்ப்பதினுபயோகம்
புளகித்துவானந்தமாம்
புணர்கின்றலிங்கமுமழுத்துவதினுபயோகம்
புதுமனுகளுற்பத்தியா
மெவையுமுபயோகமாய்ச்சிட்டித்தகடவுளா
லெவ்வுயிருமுற்பத்தியா
மேதுசுகபோகபலனெவையுநிலையில்லையே
யேகனின்சங்கற்பமே (91)

மோகத்தினியல்பு.

ஏகனிடசிட்டிப்பிராணிகளனந்தமா
மெவ்வுயிருமாண்மெண்ணுமா
மெதுவினுமோகமெனுமாசைக்கவர்ச்சியா
லேதுவாஞ்சனனமிகவே
மோகமென்பதுமொருமயக்கானவாசையே
மோசதானஞ்சிரசும்மாம்
மோகமாகியகாமம்பின்சிரசுதன்னிலே
மூளையிலுற்பத்தியே
போகசம்மதமுள்ளமோகமதுவறிவொடும்
புலனோடுசம்பந்தமாம்
பொருந்துங்கபாலத்திலஞ்சுபுலனறிவான்மா
புளகித்துவானந்தமாந்
தேகமுடனறிவோடுசம்பந்தமோகமதைத்
தீய்த்துவிடவகையில்லையே
தெய்வவுற்பவமான்மோகமுடையோர்க்குச்
செத்தாலுமகலாததே. (92)

இலாகிரியினியல்பு.

கஞ்சாவபினையுங்கள்ளுசாராயமுங்
கருதினற்பழிபாவமே
கன்மமேயறிவேதுகாயபலனழிசேது
கடுநோவுதுன்பமிகவா
மஞ்சாதகுடியர்க்குவசதியேமேலாகு
மடிக்கடிகுடிக்கவழியா
மட்டற்றகுடியாலேமாண்டவர்கணக்கில்லை
மாறாதகடன்வறுமையே
தஞ்சமனையாள்கெடத்தான்கெடப்பிறர்கெடத்
தனத்திற்கழிவாகுமாந்
தாராளகுடியாலேவிஷமாகிநோவினுற்
றவிப்பார்மருந்தில்லையா
மஞ்சாதநோவென்றுகஞ்சாவையுண்கினு
மதினாலேபின்துன்பமே
யழிவற்றவாதியின்நண்பானபத்தர்க
ளருந்தார்களகிரிகளையே (93)

செல்வமியல்பு.

பலவிடமிருக்கின்றபலபொருள்களோரிடம்
பற்றிநின்றதுபாக்கியம்
படிமீதுபொருள்களைத்தானபேதஞ்செய்தல்
பாக்கியச்செல்வமென்பார்
நலமானஜீவனநடப்பிற்குப்பலபொருள்
நாட்டிநிற்பதுசெல்வமாம்
நவில்கின்றபலபொருளியற்கையைச்செயற்கையாய்
நலமாக்கலேசெல்வமாந்
தலமீதுசெல்வத்தின்மூலமுமுயற்சியாந்
தத்துவமுயற்சியாகுந்
தரியோந்தரித்திடோஞ்செல்வமேசெல்லுவோந்
தானெங்குநிலையற்றதே
நிலமீதுகல்விதானுரித்தானசெல்வமே
நிச்சயமென்றைக்குமே
நித்தநின்பாக்கியநிலையானசெல்வமே
நிறைவானபெருஞ்செல்வமே. (94)

யாசகவியல்பு.

சோம்பேறியாசகன்சொகுசாடையாசகன்
சொற்கேளாயாசகனுமாஞ்
சொன்னத்தைச்சேர்த்துப்புதைக்கின்றயாசகன்
சொற்பத்தில்விடுவதிலையே
வீம்பானயாசகன்வாதாடுமாசகன்
வெலவந்தயாசகனுமாம்
வீணாணயாசகன்வழிவழியாசகன்
வெறுமைமிகுயாசகனுமாந்
தேம்பவேயாவரும்பாசகத்தொழில்செயச்
செப்பினன்புத்தமுனியே
சிருலகமனிதரிடம்பொய்சொல்லுமாசகன்
தீங்கானயாசகனுமாந்
தூம்பெலாமிரப்பதேதொழிலானமூடர்கள்
சொல்லவோகணக்கில்லையே
சுற்றவேபலமற்றகூன்குருடுபொருளிலார்
சூதிலார்தியாகநலமே. (95)

அழிவு.

ஓரணுவுமோர்பொருளுமொருவருமழிப்பதில்லை
யுருமாறலழிவென்பதே
யொருபொருளெரிந்தாலும்புகைவாய்வுமாவியா
யொழிந்தாகுமணுரூபமே
பார்க்கின்றபொருளெலாமணுவுகூட்டங்களே.
பரமாணுவழியாததே
பலவழியிலும்பொருளழிந்தாலுமணுவதும்
பற்றற்றுமழிவதில்லையே
யாராகிலுமணுவையாக்கவுமழிக்கவு
மகிலத்திலெங்குமில்லையே
யற்புதக்கடவுளுஞ்சிட்டித்தபொருள்களி
லணுவையுமழிப்பதில்லையே
பார்க்கின்றபொருள்முழுதும்பரமனின்சிட்டியே
பணிசெய்வார்சிட்டியில்லையே
பாரில்வெகுபொருளையேதான்செய்ததென்றுமே
பகருவதுபொய்யாகுமே. (96)

*விசுவாமித்திரர் பசியின்கொடுமை.

புத்தர்க்குப்போதித்தபுகலுவிசுவாமித்திரர்
பூரணத்தவமுனியுமாம்
புதுமையாயுணவற்றுபனிரண்டுவருடமாய்ப்
பூமியிற்றவம்பண்ணினார்
மெத்தவேபசியாகிமேற்றவநீங்கியே
வெங்கணுமுணவுகாட
மெய்யற்றபுலையனிடமாய்மாமிசக்கண்டம்
மெதுவிற்றிருடியுண்டார்
சித்துமுனியானாலுமுணவின்மேலாசையே
சேகருசிசுவரையினுஞ்
சேகோடிகளெலாமாகாரம்வேண்டலாற்
சேகிலையாதரவுமாஞ்
சத்தியாமுணவிற்குச்சர்வாசைகாரணஞ்
சகவாசைகாரணவரையே
தாரணியுயிர்க்கெலாம்புல்லன்னமதில்வைத்த
சங்கற்பநாதனீயே (97)

---

*சகலகலாபூஷணம்பார்க்க.

துறவு, சன்யாசம்.

பெண்ணாசையற்றதாற்சன்யாசமாவதும்
பெரியோர்கள்சன்யாசமும்
பெருமையால்சிறியருஞ்சன்யாசமாகியே
பெண்ணாசைதுன்பமிகவாம்
கண்ணாட்டியாசையாற்கலியாணலீலைகள்
கடைகாலசன்யாசமும்
கடைகெட்டமூடர்கள்முயற்சியின்தொழிலற்று
கள்ளசன்யாசமிகவா
மூண்ணாசைவிட்டதாவுலகாசைவிட்டதா
வுன்னரியமோட்சமாமோ
வுலகாசையற்றுமேதாமரைத்தண்ணிபோ
லுள்ளபடியெண்ணல்மனதில்
நண்ணென்பதற்றுமேநானென்பதற்றுமே
நாடுநித்தியனருளையே
நாதனும்நலமென்றுவாண்பெண்ணமைசதது
நாமொன்றமைக்கவில்லையே (98)

தேகவிசாரணை.

தேகமுள்ளாத்துமம்வந்ததுஞ்சென்றதுந்
தெரிந்தவர்களற்பமாகுந்
தேகமேசீவனுந்தேகமே[illegible]
தேகமேயின்பசுகமாம
யூகமாரவயவமொவ்வொன்றுசெயல்வேறு
வுள்ளுலகவேந்திரசாலை
யோயாதசெயலாலேமனவேகமதியூக
மொருவராற்சொல்லொணாதே
பாகமுறுசேர்க்கையாலானநற்றேகமாம்
பகுத்தறியவியலாததாம்
பகமானதேகமேசெய்தபணிகாட்சிகள்
பார்க்கவெகுவாச்சரியமே
யாகவெனுமுழுதுமே யகலாதசோதியே
யங்கமதையாளுசீவா
வங்கமதுநிற்கவுமாக்கவும்போக்கவு
மமைத்தாளுசீவனீயே. (99)

இதுவுமது.

சத்தான வித்துதனிற்சடமானதேகமே
சத்தற்றபதரிலாமோ
சத்துவேசீவனும்வித்துமேசீவனுஞ்
சடமற்றசீவனேது
வித்தினிற்பழமுண்டுகாயுண்டுபூவுண்டு
யிலைவேர்புறம்பில்லையே
விதமானதேகமதிலறிவானக்னியுண்டு
விரிபொறிப்பூக்களுண்டு
புத்திகண்ணண்டத்திஞச்சரியகாட்சிகள்
புருந்துபார்தேகமுள்ளே
புறமானநித்தியச்சீவனேயென்றாலும்
பொய்ச்சீவனில்லையேது
மத்தவிஷந்தீண்டலுமறுநஞ்சுகொண்டதால்
மனுவுயிருநிலையாகுமோ
வனல்வாய்வுமாகாரஞ்சத்துமாயெப்போது
மகாமூட்டுதயாளுநீயே. (100)

ஆத்ம விசாரணை.

உதிரமேசீவனுமுதிரவனல்சீவனு
முதிரவோட்டஞ்சீவனு
முள்ளறிவுசீவனுமுயர்விந்துசீவனு
மூடற்சாரசத்துசீவ[illegible]
கெதியாகுமன்னமயசீவனுமிருதயக்
கெதிமூச்சுநாதபூதங்
கிளர்தேகபலமுடற்கட்டுமேசீவனுங்
கெதித்தெழுமானந்தமாம்
பதிவாகதேகமுள்ளாழ்கின்றசித்துமாம்
பரசுக்குமமழியாததாம்
பரவியேதேகங்கலந்துகலவாமலே
பரப்பிரமசொருபவொளியா
மதிபதியாதமின்[illegible]சிவழியூதிய
வருபவொ[illegible]ளிசீவனென்பார்
அற்புதாநினதடிமையுடலுயிர்களுன்னதே
யமைத்தாளுசீவனீயே. (101)

இதுவுமது.

விந்ததனிலோர் துளிவெகுகிருமிசலனமிடும்
வெகுநுட்பக்கிருமிசீவன்
விம்பமாவஞ்சியிரிநாதசலசீவனு
மிரண்டுமொன்றானசீவன்
கந்தவகனுதகமுங்கதிரனலிசீவனுங்
கருவுமுதற்சீவனென்பார்
கபாலமதின்மூளைதானுள்ரயீரலிருதயக்
கனதத்வதொழில்சீவனு
முந்தவுயிர்நிலைமையெதுவெளியுமுயிர்தாவர
முள்வெளிச்சீவனென்பா
ருள்ளறிவுசந்தேகம்வெளியறிவுதிடஞான
முள்வெளியறிவுசீவ
னந்தமிகுகிருபையேநித்தியமல்லாது
வற்பவுயிர்நிலையாகுமோ
வற்புதாநின்தடிமையுடலுயிர்களுன்னதே
யமைத்தாளுசீவநீயே. (102)

இதுவுமது.

தூலசடசூக்குமசடகாரணச்சடமெனச்
சொல்வர்சரீரங்கள்மூன்றே
துணையானதேகான்மாசீவ[illegible]ர்மா[illegible]வான்மா
துய்யமூன்றான்மாவுமோ
ஞாலத்தினறிவுதானாத்மாவேகடவுளாய்
நவின்றனர்பெரியர்மிகவே
ஞானாத்துமாவென்றுநாதார்தக்காற்றென்று
நரசென்மசீவனென்று
மோலமாயாத்மாவையொன்றெனப்பலவென
வுருவமெனவருவமெனவு
முயிர்தேகநலியாலுமோடிவிடுமாத்துமா
வுயிர்கடவுளாவதில்லையே
பாலமொடுவெண்டமுதலனுவரைய[illegible]டுகிற
பரமசெயலுயிராகுமே
பரமவருளில்லாமலொருசெயலுமில்லையே
பரமநின்நீதியாமே. (103)

இராசபத்தி, தற்காலநீதி.

அங்கிலியவாட்சியிற்கருணையேநீதியா
மளவற்றநன்மைசெய்தா
ரசிபாயசித்ரவதையடியோடுநீக்கினா
ரனைவர்கள்வாழ்ந்தோங்கவே
யிங்குயாமனைவருங்கடமைபட்டவர்களா
யெண்ணுவதுநன்றியாகு
மிதரதேசங்களினின்றியாநெறிபோ
லிரக்கமுநடைபெருகுதா
லெங்குமேகொடுமோள்கைப்பற்றற்றுவிட்டதா
மெத்தேசமுஞ்செல்வமா
மெந்திரங்கைத்தொழிலெங்கெங்குமேபெருக
வேணிங்குமாவதிலையோ
தங்கும்படிசெல்வமரசரிநன்பாலே
சகலதொழிலும்பெருகுமே
தகாதபழிவஞ்சகஞ்சூதுபகையானவர்
தனந்தொழிலற்றுவிடுமே. (104)

பகுத்தறிவு.

கல்லாதபேர்களுநல்லதுங்கெட்டதுங்
கண்டுகொள்ள[illegible]
கற்றவர்களுநன்மைதீமையிதுவென்றமே
கருத்திற்பகுத்தறிவிதாஞ்
சொல்கின்றமனுடர்செயலிதனாலேயானதாந்
தொடர்வினையுமிதனாலேயே
தொல்லுலகமார்தருடலழிகின்றகாலமே
தொடருவநலந்தீங்குமே
[illegible]ல்லறிவுநன்மைக்குந்தீதறிவுதீதுக்கு
நரர்பலன்[illegible]துக்கமே
நற்சுகமடைகின்[illegible]றவிடமேசுவர்க்கமா
நரகமேதுக்க[illegible]ரும்
வல்லவெகுநன்மையாற்சொர்க்கநம்மாலில்லை
வலியோன்செயலாலேயே
மன்னுயிர்களியாவுமேசிட்டித்துக்கேள்வியால்
மாறுதமோட்சமாமே. (105)

குருநீயான பக்தி.

வல்லோனுவப்பனைவள்ளவிரகுல்நபி
 மாதேவதிருதூதராய்
வந்துமெய்யனுதிதாஒப்புவமையற்றதென
 வாழ்த்தியேமனிதரெல்லாம்
சொல்லரியபுருகானிலொன்றுதியென்றுமே
 சொர்க்கவழிகாட்டுநபியே
சோதியாலானமகுமூதநபிதூய்யதப
 தொழுகைதொழுபரமகுருவே
நல்வழியிலாக்குநபிதோழராய்நால்வர்கள்
 நற்குருவசனுசனுமாம்
நாடுநிலவாசையின்பற்றற்றநாதகுரு
 நாதன்முகைய்யதீனே
தொல்லுலகதோஷிநாயடியேனைமன்னிக்கச்
 சோதிநபிதுணைவருகவே
தோற்றரியவியலாதசுயமானவாதியே
 தய்யனேசுகமருள்கவே. (106)

இனிமேலிரண்டாம்பாகமுங் கூடிய சீக்கிரத்தில் அச்சிடப்படும்.
மாணுக்கர்களுக்கு விளக்கமாய்த் தெரியும்படி கூறியதைக் கூறவே
டியதாயிருந்தது. இன்னும் விரிவாகுமென்று அதிகமாய் விளக்கவில்லை.

முற்றிற்று